REGISTERED 17 SEP 1910 MADRAS

விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி III } ஸாதாரணஹூ ஆடிமீ 1910–ஹூ ஆகஸ்டுமீ { பகுதி 2

சினம்

ANGER

'ஆறுவது சினம்' என்றாள் ஔவை. இதில் 'தணிக்கத் தகுந்தவைகளுள் முக்கியமானது கோபம்; அது தணிய மற்றையக் குற்றங்கள் தாமே அடங்கும்' என்றபொருள் மறைந்து கிடக்கும்படி கூறியிருக்கிறாள். கோபமே ஸகல பாபங்களுக்கும் காரணமாகும். கோபத்தால் மனம் சஞ்சலப்பட்டுக் கலங்குங் காலத்தில் மனிதன் புத்தி மழுங்கிப்போக அவனுக்குப் பாபபுண்யப் பகுத்தறிவு இல்லாமல் போய்விடுகிறது. அப்பொழுது முன்பின் யோசிக்காது, பின்னர் யோசிக்குங்கால் மிகுந்த துக்கத்தை உண்டாக்கக்கூடிய தொழில்களை அவன் செய்துவிடுவான். இதுபற்றியே, 'கோபம் சண்டாளம்' என்னப்பட்டது. ஆதலால் ஒருவனுக்குவரும் முன்கோபத்தை அவன் முதலில் அவசியம் அடக்கவேண்டும். கோபம் வருங்கால் அடக்கி ஒன்றும் செய்யாதிருக்கும் பழக்கத்தை ஒருவன் பண்ணிவந்தால் வர வர கோபத்தின் குணங்களும் அதுவரும் தருணங்களும் அவனுக்கு வெளியாகி அதை அடக்கும் முயற்சிகளை அவன் நன்றாகச் செய்யும்படி நேரிடும்.

மனதில் இருக்கும் எண்ணங்கள் மாறினால் தான் ஒழுக்கமும் மாறும். ஒழுக்கத்தை மாற்றினால் மாத்திரம் மனம் மாறிவிடும் என்றெண்ணுவது, பாம்புப் புற்றை அடித்துத் தள்ளிவிட்டவுடன் பாம்பை அடித்தாகிவிட்டது என்று எண்ணுவதற்கு ஸமம். ஆதலால் கோபத்தை முற்றிலும் தணிக்க முற்கூறிய பிரதம கோபநிவாரணமாகிய நல்லொழுக்கம் மாத்திரம் போதாது. நமது மனதில் கோபத்தைத் தடுப்பதற்கு வேண்டிய எண்ணங்கள் நிறையும்படி செய்யவேண்டும்.

வித்யாரண்ய ஸ்வாமிகள் ஜீவன் முக்திப்பிரகரணத்தில் கோபத்தை வேரறுப்பதற்காகப் பின்வருமாறு முமுக்ஷுவுக்குப் புத்திமதி கூறுகிறார்: "கோபம் வருவதற்குமுன் ஒருவன் 'மனமே! உனக்குத் தீமை விளைப்பவர்களிடம் கோபம் வருவதானால், உனக்குப் பெருங்கேடு விளைக்கும் சினத்தினிடம் ஏன் கோபம் வருவதேயில்லை? கோபத்தால் அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருஷார்த்தங்கள் கைகூடாமல் போய்விட நரகமே லபிக்கும். ஆதலால் கோபத்தைப்போல நமக்கு விரோதி ஒருவரும் இல்லை' என்று அடிக்கடி மனனம் செய்து கோபத்தின்மேல் கோபங் கொள்ள வேண்டும். 'சோபமானது திட்டு, அடி முதலியவைகள் ரூபமாக வெளிவந்து விட்டால் ஒருவனது தர்மம், கீர்த்தி முதலியவைகளைக் கெடுத்துவிடும். இவ்வாறு வர இடமில்லாது தடைபட்டால் அவன் மனதையாவது கஷ்டப்படுத்தாமல் போகாது. ஆதலால் அறிவுடையோர் சினத்திற்கு ஒருநாளும் இடம் கொடுக்கவே மாட்டார்கள்,' என்று இம்மாதிரி எண்ணினால் பிறரிடம் நமக்குவரும்கோபம் அடங்க மூத்திவழி திறந்திடும். பிறர் நம்மேல் கோபித்துக் கொள்ளுங்கால் 'யான் நிரபராதியாக விருக்க என்மேல் அவன் ஏன் வீணுக் கோபிக்கவேண்டும்?' என்று எண்ணிக் கோபம் கொள்ளாது பின்வருமாறு யோசிக்கவேண்டும்: 'நாமோ தேஹஸம்பந்தம் நீங்கி எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு எங்கும் நிறைந்த பரம்பொருளை உணரவில்லை. இவ்வாறு செய்தால் தான் நாம் நிரபராதியாவோம். அதுவரையில் நம்மை அறியாது செய்கையாலாவது செய்யாமையாலாவது கோபிப்பவனுக்கு அபராதம் செய்திருப்போம்' என்றும் 'கோபிப்பவர்கள் நமக்கு பரம உபகாரிகள்; அவர்கள் நமது குற்றங்களை உள்ளபடி ஒளிக்காது எடுத்துக்காட்டி நமக்கு வைராக்யம் வரும்படி செய்கிறார்கள். மேலும் இவ்வாறு செய்வதில் அவர்கள் தமக்குக் கோபத்தால் விளையும் மனக்கஷ்டத்தைக்கூடக் கவனியாது நமக்கு இந்தப் பேருதவி புரிகின்றனரல்லவா?' என்றும் எண்ணி வெகுநாள் பழக்கத்தின் பேரில் இவ்வித கோபத்தின் வேரை அறுக்கவேண்டும்.

இம்மாதிரி பழகி மனம் சுத்தப்பட்டால் முன்னர் கூறியுள்ள ஸன்மார்க்க ஸாதனங்கள் ஒருவன் மனதில் வேரூன்றி நிலைபெறும்.

விவேக போதினி

தொகுதி 3] ஸாதாரணஹு ஆடிமீ [பகுதி 2

முக்கிய உபநிஷத்துக்கள்

THE PRINCIPAL UPANISHADS

III. கடோபநிஷத் (2)

யமதர்மராஜன் நாசிகேதஸ்ஸை நோக்கி உபதேசிக்கிறன்:—

I இரண்டாவது வல்லி.—உலகில் சிரேயஸ்கரமானவை, ஸுககரமானவை என விஷயங்கள் இரண்டு விதம். இவைகள் ஸதா மனிதனை வந்தணுகும்; புத்திமான்கள் இவை இரண்டனுள் முன்னதை கடைப்பிடித்துப் பரமபதம் எய்துவர், மூடரோ பின்னதை முன்பின் யோசிக்காது மிகுந்த ஆவலுடன் கைப்பற்றி புத்தி மழுங்கப்பெற்றுப் பிறப்பிறப்பில் கடந்துழன்று குருடனால் நடத்தப்பட்ட குருடன் கதியை அடைந்து மிகவருந்துவர். அறிவீனர் 'கண்டதேகாக்ஷி கொண்டதே கோலம்'என்று இறுமாந்து மறுமை ஒன்றுண்டு என்ற எண்ணமற்றவராய் என் வசப்படுவர். புத்திமான்கள் தமது மார்க்கத்தில் சென்றடையும் பரம் பொருள் எளிதில் விளங்கக் கூடியதல்ல. அதைப்பற்றி உபதேசிப்பவனும், அதைக்கேட்டறிபவனும் அத்புத புத்தி யுடையவர்களாக விருத்தல் வேண்டும். குரு ஸஹாயமின்றி அதை அறியவே முடியாது. அது அவ்வளவு ஸூக்ஷ்மமானது. உலகவிஷயங்கள் ஸுக துக்கங்கள் மத்தியில் புத்தி முதலிய எல்லாவற்றிலும் பரவி நிற்கும் ஆத்மாவை விஷய ஆசை நீங்கி ஏகாக்கிரமனதோடு கண்டு அறிந்து ஞானிகள் ஸுகதுக்கம் நீங்குவர். வேதமுடிவு, தபஸின் நோக்கம், பிரம்மசாரிகள் அடைய முயலும் முடிவு எல்லாம் ஓம் என்பதே. இதை உள்ளபடி உணர்ந்தவர் முற்று முணர்ந்தவராவர். கொல்பவன் தான் கொல்லுவதாகவும், கொல்லப்படுபவன் தான் கொல்லப்படுவதாகவும் எண்ணுவது வீண் அஞ்ஞானமே. உண்மையில் கொல்லப்படுவதும், கொல்வதும் இல்லை. ஸூக்ஷ்மத்தைவிட ஸூக்ஷ்மமாயும், எங்கும் ஓடிப்பரந்ததாயும் உள்ள ஆத்மா ஒவ்வொரு ஜீவஜந்துவுள்ளும் காணப்படுகிறது. இதை நிராசை, மனோநிரோதம் இவைகளை உடைய ஒருவன் தரிசித்துப் பரவசமாகி துக்கம்நீங்குகிறன். இந்த ஆத்மாவை இன்னதென்று குறிக்கமுடியாது இது தேஹமற்றது, மாறும் ஸகலவஸ்துவுள்ளும் இருப்பது என்றறிந்து பெரியோர்கள் துக்கம் நீங்கினர். இந்த ஆத்மாவை வேதம் ஓதல், புத்திக்கூர்மை, அதிகக்கேள்வி இவைகளால் அறிவது மிகக்கஷ்டம். இதை நேரிட அறிய முயலவேண்டும். இது உண்மையான முயற்சி உள்ளவர்களுக்கே விளங்கும். நன்னடக்கை, மனோநிரோதம், சித்த ஏகாக்கிரம், சாந்தம் இவைகளில்லாத ஒருவன் ஆத்மாவை அறிந்து தெளியமுடியாது.

I மூன்றுவது வல்லி.—மனிதன் ஹ்ருதயத்தில் இரண்டுஆத்மாவுண்டு. அவைகளுள் ஸுக துக்கங்களை அனுபவிப்பது ஒன்று. இதற்கு நிழல் என்றும், மற்றொன்றுக்கு ஒளி என்றும் பெரியோர் பெயர் கொடுத்திருக்கின்றனர். ஆத்மாவே ரதிகன், தேஹமே ரதம், புத்தியே ஸாரதி, மனஸே கடிவாளங்கள், இந்திரியங்களே குதிரைகள், இந்திரிய விஷயங்களே மார்க்கம், மனஸ் ஸம்பந்தப்பட்ட ஆத்மாவே அனுபவிப்பவன். பகுத்தறிவின்றிப் புத்தி மழுங்கி, அடங்கிய மனமில்லாதவனுக்கு இந்திரியக் குதிரைகள் அடங்கமாட்டா. இதனால் இவன் முடிவைச் சென்றடையாது நடுவே ஸம்ஸாரத்தில் மூழ்கித்தத்தளிப்பான். இதற்கு மாருகப், புத்தி முதலியவைகள் அடங்கியிருப்பவன் பரமபதம் அடைவன். இந்திரியங்களைவிட விஷயங்களும், விஷயங்களைவிட மனமும், மனத்தைவிட மஹத்து (புத்தியின் ஸாரம்சமும்), மஹத்தைவிட அவ்யக்தமும்

(தோன்றா ஜகத்காரணமும்), அவ்யக்தத்தை விட புருஷனும் (எல்லாவற்றிலும் பூர்ணமாக நிறைந்திருப்பவனும்), முறையே ஸூக்ஷ்மமானவை. இதை ஸூக்ஷ்ம திருஷ்டியுடைய ஞானிகளே உள்ளபடி அறிவார்கள். முற்கூறியபடி ஒன்றை அதைவிட ஸூக்ஷ்மமானதில் அடக்கி பரம ரஹஸ்யத்தை உணரவேண்டும். இதை அடையும் மார்க்கம் கத்தி முனையைவிட ஸூக்ஷ்மமாதலால் இதைப் பெரியோர்களை அடுத்தே உணரவேண்டும். எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட இதை அறிந்த மனிதன் மரணத்திற்கு ஆளாகாமலிருப்பான்.

II நான்காவது வல்லி.—மனிதர்கள் இந்திரியங்கள் முதலியன வெளிநோக்கியே போகும் தன்மைய. அவைகளை உள்ளே திருப்பிச் சில ஞானிகள் அமரத்துவம் அடைய முயல்வார்கள். விஷயங்களைப் பெரிதென்றெண்ணி ஓடும் அஞ்ஞானிகள் மரணத்திற்கு இறையாவார்கள். ஞானிகளோ நிலைத்த வஸ்துவை உணர்ந்து நிலையில்லா விஷயங்களை விரும்பார். இந்த நிலைத்த வஸ்துவே எல்லாவற்றிற்கும் உணர்ச்சி உண்டாக்குவது. உலக விஷயங்களை அனுபவிப்பது போலக் காணப்படுவதும், முக்காலங்களிலும் மேலாக இருப்பதுமான இவ்வாத்மாவை உணர்ந்தவர் நிர்பயமாக இருப்பர். ஹ்ருதயகமலத்திலும் இன்னும் அக்னி முதலிய எங்கும் இருப்பதும் இந்த ஆத்மாவே. இதுதான் பரமபதம். இங்கிருப்பதே (இவ்வுலகத்தில் இருப்பதே) அங்குண்டு (பரமபதத்திலும் உண்டு), அங்கிருப்பதே இங்கும். இவைகளுள் பேதம் உணர்பவர் பிறந்திறந்து வருந்துவர். மனத்தாலேயே இந்த அபேதத்தை உணரவேண்டும். அதிஸூக்ஷ்மமாயும், அறிவுருவாகவும் எக்காலத்தும் மாறாததாயும் இருப்பதே இந்தப் பரமபதமாகிய ஆத்மா. மலையில் விழும் மழைநீர் சிதறிப் போவதுபோல விஷயங்களை வேறு என்றெண்ணி மனிதன் அவைகளைப் பின்பற்றுகிறான். சுத்தஜலம் சுத்தஜலத்தோடு கலந்து ஒன்றுபடுவது போலவே ஞானியின் ஆத்மாவும் பரம்பொருளோடு ஒன்றுபடும்.

II ஐந்தாவது வல்லி.--பிறப்பற்றதற்குப் பதினொருவழிகளுடைய ஓர் பட்டணம் உண்டு. இத்தகையதைஉணர்ந்து விடுபவர் பெரியோர். மூச்சுகளால் மாத்திரம் மனிதன் உயிருடன் இருப்பதில்லை. இவைகளுக்கு அப்பாற்பட்ட ஒன்றாலேதான் இது நிற்கிறது. மரணத்திற்குப்பின் தமது கர்ம எண்ணங்களுக்கேற்ப சில ஆத்மாக்கள் மறுபடி பிறக்கின்றன; சில மரம் ஸ்தாவரங்களாகின்றன. இப்படி இருப்பினும், இவைகளுள் இருக்கும் புருஷனுக்கு யாதொரு குறைவும் இல்லை. இதைத் தாண்டி எதுவும் நிற்காது. அக்னி, காற்று இவைகள் தனித்தனி ஒன்றாயினும் உலகில் அநேக உருவங்களுடன் காணப்படுவதுபோல, ஆத்மா ஒன்றாயினும் அநேகமாகத் தோற்றுகின்றது. எல்லா வஸ்துக்களிலும் பிரகாசிக்கும் ஸூர்யனை அந்த வஸ்துவின் குறைவு முதலியன வந்து எவ்வாறு தாக்குவதில்லையோ, அவ்வாறு தோற்றங்களால் அவைகளுக்கு அப்பாற்பட்ட ஆத்மா தாக்கப்படுவதில்லை. இம்மாதிரியிருக்கும் ஆத்மாவே ஸர்வ சக்தியுடையது, மாறாதிருப்பது, சித்துருவானது, எல்லாவற்றையும் திருப்நிப்படுத்துவது என்று உணரும் ஞானியிடத்தே மாறாசாந்தி நிலைபெறும். இந்த ஆத்மாவிடத்து ஒன்றன் ஒளியும் சென்று எட்டாது. ஸூர்யன்முதலிய ஒளிவிடும் வஸ்துக்கள் எல்லாம் இந்த ஆத்மாவாலேயே ஒளிபெற்றிருக்கின்றன.

II ஆறாவது வல்லி.—மேல் நோக்கிய வேரும் கீழ்நோக்கிய கிளைகளும் உடைய பழமையான அசுவத்தமரம் (பிரபஞ்ச விருக்ஷம்) ஒன்று உண்டு. இது உண்மையில் மிகுந்த பரிசுத்தமானது. இதுதான் பிரஹ்மம். இதற்கு அப்பாற்பட்டது ஒன்றும் இல்லை. இந்த பிரஹ்மத்

திற்குப் பயந்தும் அடங்கியும் தான் பிரபஞ்சமே தொழில்படுகின்றது. எல்லாம் தத்தமது வேலைகளை ஒழுங்காக நடத்திவருகின்றன. இதை உயிரிருக்குங்கால் உணர்ந்தவனுக்கு மறு ஜன்மமில்லை. இவ்வுலகில் பிரஹ்மத்தைக் கண்ணாடிப் பிரதிபிம்பம்போலவும் மற்றையவிடங்களில் இதை மங்கலாகவும் தான் அறியக்கூடும். இந்திரியங்கள் ஆத்மாவைவிட வேறானவை என்றுணர்ந்து ஞானிகள் துக்கம் நீங்குவர். ஆத்மாவை இந்திரியங்களால் உணரமுடியாது. புத்தி, மனோநிரோதம், தியானம் இவைகளால் அது விளங்கவேண்டும். இந்திரியங்கள் அடங்கி மனதில் லயித்து புத்தி அசையாது நிலைபெறின் பரமபதம்ஸித்திக்கும். இதற்கு யோகம் என்று பெயர். இந்த ஆத்மா இருக்கிறது என்பதை உணர்ந்தாலொழிய வேறு எவ்விதத்திலும் இதை அடைய முடியாது. இவ்வாறு ஆத்மா உண்டென்று உணர்ந்தவனுக்கு ஆத்மாவின் உண்மைநிலை பின்னர் விளங்கும். மனத்தில் உள்ள பற்று, ஆசை இவைகள் அறநீங்கின் மனிதன் அழிவற்றவனாவன். அதாவது 'அற்றது பற்றெனின் உற்றது வீடு.' இதுதான் உபநிஷத். ஓம்தத்ஸத்.

இதன் பின்னர் இந்த உபநிஷத்தில் பரமரஹஸ்யம் உணராதவர்களுக்காகக் கொஞ்சம் யோகமார்க்க விஷயம் கூறப்பட்டிருக்கிறது.

இந்த உபநிஷத்தை இக்காலத்தவர்களில் சிலர் மிகப்புகழ்ந்துகூறியிருக்கின்றனர். இவைகளுள் பின்வரும் மொழிபெயர்ப்பில் கடோபநிஷத்தின் ஸாராம்சம் நன்றாக வெளிவருகின்றது: 'நாசிகேதஸ் யமனிடம் சென்ற கதையே என் மனதை மிகக் கவர்ந்தது. இக்கதையுள் அடங்கியிருக்கும் விஷயம் மிகச்சிறந்தது. வாழ்க்கை அநேக ரஹஸ்யங்களை உடையது. இதனால் தான் நாம் ஓயாது மென்மேலும் உணர்ந்து உணாந்து மென்மேலும் விருத்தியடைய முயலுகிறோம். அதிகமாக உணர உணர அதிரஹஸ்ய விஷயங்கள் தோன்றி நம்மைமென்மேலும் இழுத்துப்போகின்றன. நாம் பயந்து நடுங்கக்கூடிய மரணமே வேறு எதனாலும் அறிவிக்கமுடியாத 'ஆத்மா அழிவற்றது' என்ற பரமரஹஸ்யத்தை வெளியிடும் நமது பிராண ஸ்நேஹிதன் என்று தெரிவிக்கும் இக்கதை, எவ்வளவு அழகாய் வாழ்க்கையின் நிலைமையை வெளிப்படுத்துகிறது பாருங்கள்! இதை அறிய மரணம் வரையில் நாம்காத்திருக்கவேண்டியதில்லை. இது எப்பொழுதும் நம்மைச்சுற்றியே இருப்பது. சிறந்ததை அடைய விஷபஸுகவஸ்துவைத் துறக்கவேண்டும்என்பதே இந்த ரஹஸ்யம். இவ்வுலகப் பற்றைவிட்டதும் பரமபதம்ஸித்திக்கும் என்ற இந்த ரஹஸ்யம் யமனாலே மரண மூலமாகத் தான் நன்கு தெரியவரும் என்பதை இந்த உபநிஷத் எவ்வளவு அழகாகக் காட்டியிருக்கிறது!'

மேலும் மூன்றாவது வல்லியிலுள்ள ரதாதிக திருஷ்டாந்தமே பாரதத்திலிருக்கும் பகவத்கீதையின் உட்கருத்தை நன்றாகக் குறிக்கின்றது. இந்த உபநிஷத்திலிருந்துதான் கீதையில் வரும் சிற்சில சுலோகங்களும் பதங்களும் காணப்படுகின்றன. உபநிஷத்துக்களுள் இந்த உபநிஷத்தே மிகச் சிறந்ததும், கற்பனா விஷயங்கள் மூலமாகக் கேட்போர் மனதைப் பரவசமாக்கி பரிசுத்தமாக்கும் திறனுடையதும் ஆதலின் இதன் கருத்தே கீதையாகப் பலருக்கும் உபகாரமாகும்படி பகவானிடம் இருந்து வெளிவந்ததுபோலும்.

இளமையில் மனத்தை ஈசன்பால் செலுத்துக

'செடியாய் வளையாதது மரமாய் வளையாது.' மிருதுவான இளமூங்கிலை இஷ்டப்படி வளைக்கலாம். மரமாய் வளர்ந்த மூங்கிலை வளைக்க முயன்றால் மளுக்கென முறிந்துபோம். அதுபோல, இளமையிற் சிறுவர்களின் மனத்தைக் கடவுள்பால் திருப்புவது சுலபம். அச்சிறுவர்களே வளர்ந்து முதியோர்களானால் அவர்கள் ஹ்ருதயம் எவ்வகைத் திருத்தத்துக்கும் இடங்கொடாது.

ஷேக்ஸபியர் நாடகத்தில் வரும் ஸ்த்ரீ ரத்னங்கள்

LADYCHARACTERSFROMSHAKESPEARE

போர்ஷியா—PORTIA

இப்பெயர்கொண்ட பெண்கள்நாயகம் இத்தாலியா தேசத்தில் வேனீஸிற்குச் சமீபத்தில் பெல்மோந்து என்னுமிடத்தில் பிறந்தவள். இவளுடைய உன்னதகுணம், தயாள சிந்தை, கற்பு முதலிய பல குணங்களை ஆங்கில கவிசிரோமணியாகிய ஷேக்ஸ்பியர் தன் நாடகங்களிலொன்றாகிய 'வேனிஸ் வர்த்தகன்' என்பதில் மிக்க அழகாகப் படிப்போர் மனமகிழ எழுதியுள்ளார். இம்மாதின் சரித்திரத்தை நம் நண்பர் பலரும் அறிந்து மகிழ ஒருவாறு மிகச் சுருக்கிக் கூறப்படும்: இப்பெண்ணரசி மிக்க திரவிய சம்பத்துள்ள ஒரு பிரபுவின் ஒரேபெண். தன்னைக்கண்ட ஆடவர் மனத்தைக் கொள்ளைகொள்ளும் அழகுள்ளவள். அவள் தக்க பருவம் வாய்ந்து ஒரு கணவனை நாடி மணக்குமுன் தந்தை பரமபதமடைந்தார். அவருக்குப்பின் அவர் செல்வத்துக்கெல்லாம் இப்பெண்ணொருத்தியே தலைவியானாள். தான் இவ்வளவு செல்வம் பெற்றிருந்தாலும், உலகத்தார்போல அன்னியரைப் பொருளால் மதியாமல் குணத்தால் மதிக்கும் தன்மையுடையவள்.

இப்பெண்ணை வேனிஸ் நகரத்தோனாகிய பஸ்ஸானியோ என்னுமொரு பிரபு மணங்கொள்ள விரும்பினான். இவன் போர்ஷியாவின் தகப்பனிருக்குங்காலத்தில் அவளை இரண்டொருமுறை சந்தித்ததுண்டு. அவள், இப்பொழுது தன்னை மணஞ்செய்துகொள்வாள் என்ற நம்பிக்கை இவனுக்கு உண்டு. ஆனாலும் பணத்தில் முழுகிக்கிடக்கும் அப்பெண்பாலை மணஞ்செய்யப் போதுமானதிரவியம் இவனிடமில்லை. ஒருநாள் தன் பிராண சிநேகிதனாகிய அந்தோனியோ என்னும் சீமானிடம் சென்று தன் விவாகவிஷயமாக ஆலோசித்தான். பிறகு இருவரும், கடன் கொடுத்து அநியாய வட்டி வாங்கி ஜனங்களை வதைக்கும் ஒரு யூதனிடம் சென்று, தங்களுக்கு வேண்டிய பணத்தொகையை ஒருபத்திரமெழுதிக் கொடுத்து வாங்கிக் கொண்டார்கள். இப்பத்திரம் நாம் தற்காலத்தில் கடன் வாங்கும்போது எழுதும் பத்திரம் போன்றதன்று. அதில் குறித்த கெடுவுக்குள் பணம் கொடுக்கத் தவறின் அந்தோனியோ தன் உடலில் ஒரு ராத்தல் மாமிசம் கொடுப்பதாக எழுதியிருந்தான்.

இவ்வளவு நிர்ப்பந்தத்துக் குட்பட்டு வாங்கின திரவியத்துடன் தன் மற்றொரு நேசனாகிய கிரேஷியானோவையும் அழைத்துக் கொண்டு பஸ்ஸானியோ, போர்ஷியா இருக்குமிடம் சென்றான். அங்குப் பஸ்ஸானியோ ஒருநாள் போர்ஷியாவுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, தான் ஒருக்கால் திரவிய சம்பன்னனாயிருந்து பிறகு பலவிதமாய் பணத்தைச் சிலவிட்டுத் தன் விவாகத்திற்குக்கூடக் கடன் வாங்கும் ஸ்திதிக்கு இப்பொழுது வந்திருக்கும் தன் வரலாறுகளைத் தெரிவித்தான். அவ்வுத்தமி இவன் வரலாற்றைக்கேட்டுச் சிறிதும் மனங்கோணாமல், "நான் பணத்தை மதிப்பவளல்லள். உம்மை குணத்தை நாடியே நாயகனாக அடையவிரும்புகிறேன்" என்று அவன் மனங்குளிரத் தெரிவித்தனள். இக்காலத்திலோ பெண்களாவது, அவர்கள் பெற்றோர்களாவது குணத்தை எண்ணி மருமகனை மதிக்கிறார்களா? 'அறுத்தாலும் அரசி' என்பதற்கிணங்க, பணமிருந்தால் பிணமானாலும் சரி என்று திரவிய முள்ளவர்களையே தேடுகிறார்கள். இது நிற்க, பஸ்ஸானியோவின் நேசன் கிரேஷியானோ, போர்ஷியாவின் தோழியாகிய நேரிஸ்ஸா என்னும் ஒரு பெண்மகளை மணந்தேடிக்கொண்டான்.

இவ்வாறு இரண்டு தம்பதிகளும் மனமுவந்து விவாகத்திற்கு ஒப்புக்கொண்டதும், அந்தோனியோவிற்கு, தன் சிநேகிதன் தனக்காக வாங்கின கடன் கெடுவுநாள் மீறிவிட்ட

தென்றும், அதனால் பத்திரத்தில் குறித்த தண்டனைக்குத் தன் நேசன் உட்படவேண்டும் என்னும் சமாசாரம் கிட்டியது. இச்செய்தி கேட்டதும் பஸ்ஸானியோ மனந்திடுக்கிட்டு நடுங்கினான்; மிக வருந்தினான். போர்ஷியா சகல சமாசாரங்களையும் தெரிந்துகொண்டு, தன் விவாகத்தைச் சீக்கிரம் முடித்துவிட்டு, தன் கணவனிடம் கடன்தொகைக்கதிகமாகத் திரவியத்தைக்கொடுத்து அந்தோனியோ இருப்பிடமனுப்பினாள். கிரேஷியானோவும் தன் விவாகத்தை முடித்துக்கொண்டு சிநேகிதனுடன் தானும் புறப்பட்டான்.

போர்ஷியா கணவனையே தெய்வமாகப் பாராட்டும் கற்பரசி. தன் கணவன் விருப்பமின்றி யாதொரு காரியமும் செய்ய முயலாள். ஆனாலும் தன் கணவனை அனுப்பிவிட்டுப் பிறகு அந்தோனியோவை, அவனுக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தினின்றும் நீக்கத் தன்னாலியன்றமட்டும் முயற்சிசெய்ய நிச்சயித்துக்கொண்டாள். இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் அவள் மனதில் ஒரு அற்புதயுக்தி தோன்றிற்று. அவளுக்கு ஒரு பேர்போன நியாயவாதி (வக்கீல்) ஒருவரைத் தெரியும். இவரிடம் இந்தக் கேசுக்கு வேண்டிய சமாசாரங்களைத் தெரிந்துகொண்டு, நியாயவாதிகள் அணியும் அங்கி (கவுன்) ஒன்றையும் அவரிடமிருந்து வாங்கிக்கொண்டு, புருஷவேஷம் பூண்டு, தன் தோழி நெரிஸ்ஸாவையும் புருஷவேஷம் தரிக்கச்செய்துத் தன் குமாஸ்தாவாக அழைத்துக்கொண்டு தன்கணவர் இருக்கும் நகரத்திற்கு வந்தாள். வந்ததும் நியாயசபைக்குச் சென்று நியாயாதிபதியின் உத்தரவு பெற்றுக்கொண்டு, அந்தோனியோவிற்கு வக்கீலாகப் பேச ஆரம்பித்தாள். தான் எடுத்த காரியத்தை நினைக்க நினைக்க அவளுக்குப் பெருஞ்சந்தோஷமும், தைரியமும், யுக்தியும் தோன்றிற்று.

முதல் முதலில் பத்திரத்தை நன்றாய் படித்துப் பார்த்து அதன்படி யூதன் அந்தோனியோவின் உடலில் ஒரு ராத்தல் மாமிசம் கொள்ளல் நியாயம் என்றாள். இது கேட்டு யூதன் மிகச்சந்தோஷங்கொண்டான். பஸ்ஸானியோ மனந்தடுமாறி "ஐயோ, என் மனைவியுட்பட என் சொத்துக்களை யெல்லாம் விட்டு விடுவேன். என் சிநேகன் உயிர் பிழைத்தால் போதும்" எனக் கதறினான். இச்சொற்களைக் கேட்டுப் போர்ஷியா சிறிதளவும் மனவருத்தப்படவில்லை. பிறரிடத்து அன்பு மிக்காளாதலின், வருத்தத்தால் கணவன் இவ்வாறு கூறியது சரியே என்றெண்ணினாள். இது நிற்க, சிறிது நேரத்திற்கெல்லாம் மாறு வேடங்கொண்ட போர்ஷியா தன்புத்தி சூக்ஷ்மத்தால் யூதன் மனமேங்கும்படிச் செய்தாள். எப்படியெனில், "பத்திரப்படி யூதன் ஒரு ராத்தல் மாமிசம் எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு ஒரு கடுகளவு அதிகமாவது, குறைந்தாவது கொள்ளல் தகாது. தவிர, ஒரு துளி இரத்தமாவது மாமிசம் எடுங்குங்கால் நிலத்தில் விழக்கூடாது" என்று இவ்வாறு போர்ஷியா எடுத்துக் காட்டினாள். நியாயாதிபதி யுட்பட அங்கிருந்த யாவரும் மனமகிழ்ந்தனர். யூதன் மனக்கிலேச மடைந்து பணங்கிடைத்தால் போதும் என்று வேண்டினான். பஸ்ஸானியோ பணங்கொடுக்கத் தயாராயிருந்தும், போர்ஷியா தன் சாமார்த்தியத்தால் பத்திரத்தில் அது குறிக்கப்படவில்லை என்று வாதித்து, யூதன் எண்ணமெல்லாம் சிதற அடித்தாள்.

அச்சபையில் ஒருவருக்கும் போர்ஷியாவை மாறுவேஷத்தில் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு அவளும் நெரிஸ்ஸாவும், நியாயாதிபதியிடம் சிலவு பெற்றுக்கொண்டு, பஸ்ஸானியோ, கிரேஷியானோ இவ்விருவரிடமும் தாங்கள் அந்தோனியோவிற்குச் செய்த பேருதவிக்காக கணையாழி மோதிரங்களைப் பெற்றுக்கொண்டு சந்தோஷமாகத் தங்களூருக்குத் திரும்பினார்கள்.

பிறகு பஸ்ஸானியோ, அந்தோனியோ, கிரேஷியானோ இருவருடன் தன் மனைவியிருப்பிடமாகிய பெல்மோந்துக்குப் போனான். பேல்மோந்து சேர்ந்த சிறிதுநேரத்திற் கெல்லாம் இரண்டு ஸ்திரீகளும் தங்கள் கணவன்மார்கள், கணையாழி மோதிரங்களை ஒருபெண்பாலுக்குக் கொடுத்து வந்ததாகக் குற்றஞ்சாட்டி,மனவருத்தப்படுவதாக மாயம்பண்ணி, வேடிக்கை பார்த்தார்கள். இதற்குள் அந்தோனியோ,போர்ஷியாவிடம் தன் நண்பனுக்காகப் பரிந்து பேசினான். போர்ஷியா உயர் குணமங்கையானதால், தன் கணவனை வீண் வருத்தத்திற் கிடங்கொடுக்கச் சகியாமல் மோதிரத்தைக் காட்டி நடந்த வரலாறுகளை எடுத்துச்சொன்னாள். யாவரும் மனமகிழ்ந்தனர். பஸ்ஸானியோ தன் மனைவியின் அதி அற்புத சாமர்த்தியத்திற்காக மிகவும் கொண்டாடினான். பிறகு யாவரும் க்ஷேமமாக வாழ்ந்து வந்தனர்.

இச்சரித்திரத்தால் பெண்கள் தம் கணவரை பணத்தாலன்றிகுணத்தால் மதிக்கவேண்டுமென்பதும், தம் கணவருக்கு வழிபாடுசெய்து அவரிஷ்டப்படி நடந்து அவர் மனங்குளிரச் செய்வதே பெண்கள் கற்புக்கோர் பூஷணம் என்பதும், தங்கள் புருஷர் துயரைத் தீர்க்க போர்ஷியா பெருமாட்டிபோல எல்லைகடந்து நடப்பினும் குற்றமாகாதென்பதும் நன்கு விளங்குகின்றது.

எஸ். சிவராமய்யர்.

விடாமுயற்சி

பரம்பரையாய்ப் பயிரிடுங் குடியானவன் பன்னிரண்டு வருஷம் சேர்ந்து மழை பெய்யாமலிருந்தாலும், நிலத்தை யுழுவதை நிறுத்தமாட்டான். புதிதாக உழவுதொழிலைக் கைக்கொண்ட வர்த்தகனே ஒரு காலமழை பெய்யாது போகும்போதே அதைரியம் அடைந்து விடுகின்றான். அதுபோலவே, ஆயுட்காலபரியந்தம் பக்திசெய்த பகவானைக் காணவிடினுங்கூட உண்மையான பக்தன் ஒருகாலும் அதைரிய மடைவதில்லை.

வியாஸ விதானம்

ESSAY WRITING

I. வர்ணனை வியாஸங்கள்

DESCRIPTIVE ESSAYS

(2)பழக்கக்கூடிய பிராணிகள்—விகடப்பறவை

TAMEABLE ANIMALS—*The Mocking Bird*

குறிப்பு.—தோற்றம் முதலியன—காணப்படும் இடங்கள்—பிடிக்கும் விதங்கள்—ஸ்வபாவம்: பிடிபடுவதற்கு முன்னும், பின்னுமுள்ள நிலைமை.

விகடப்பறவை என்பது சற்றேறக்குறைய 9-அங்குல நீளமுள்ளது. இதன் முதுகுப்பாகம் கருமை கலந்த செம்மை நிறமாயும், இதன் இறக்கைகளும் வால் பாகமும் கருநிறமாயும், அடிப்பாகமாகிய வயிற்றுப்பாகம் மங்கல் வெளுப்பு நிறமாயும் இருக்கும். எந்த ஓசையைக் கேட்டபோதிலும் உடனே அதேமாதிரி தானும் கூவும் திறனுடையதாதலின் இதற்கு இப்பெயர் வந்தது. இந்தக் காரணம் பற்றியே இது காணப்படும் நாட்டிலுள்ளோர் இதற்கு 'நானூறு நாப்படைத்த நந்தனப்பறவை' என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.

இப்பறவை அமெரிக்கா கண்டத்தில் ஐக்ய மாகாணங்கள் முதல் ப்ரேஸீல் என்ற நாடு வரையிலுள்ள காடுகளில் மிகுதியாகக் காணப்படும். அந்தப் பிரதேசங்களில் அதிகாலையில் மற்றைய பக்ஷிகள் எல்லாம் கூடிச் சப்திக்கும் காலத்தில், இந்த விகடப்பறவையும், ஓர் உயரமான புதர் அல்லது சிறிய மரம் இவைகளின் மீது ஏறிக்கொண்டு அநேகவிதமாகச் சப்திக்கத் தொடங்கும். இதன் பாட்டும் சப்தமும் அந்தக்காலத்தில் கூட மற்றைய பக்ஷிகளின் ஓசைக்கு மேலாகவே ஓங்கிநின்று அவைகளைப் பயனற்றவையாக்கும். உத்ஸாகம் பிறந்து தனிமையாகச் சப்திக்கும் காலத்தில், இது செய்யும் விகட ஓசைகள் அருகிலிருந்து கேட்பவர்கள் மனதைக் கவரும் தன்மையுடையவையாகவிருக்கும். ஒரு குருடன்

இதன் அருகிலிருப்பானாயின், காட்டிலுள்ள பறவைகளெல்லாம் தத்தம் திறத்தைக் காட்டப் பந்தயம் போடுகின்றனபோலும் என்று எண்ணுவானேயொழிய, சப்திப்பது ஒருபறவைதான் என்று அவன் ஒருபொழுதும் நினைக்கவே மாட்டான். இவ்வளவு அற்புத சக்தியை உடையது இந்த நானூறு நாப்படைத்த நந்தலைப் பறவை.

ஸாதாரணமாகக் கிளி முதலியவைகளைச் சுருக்கு, கண்ணி, பிசின் முதலியவைகளை உபயோகப்படுத்திப் பிடிப்பதுபோலவே இந்தப் பக்ஷியையும் அத்தேசத்தவர்கள் பிடிப்பது வழக்கம். பிடிபட்டுக் கூட்டில் அடைபட்ட போதிலும் இதன் இயற்கை உத்ஸாஹம் குன்றுவதேயில்லை. பிடிபட்ட பின்னர் யஜமானனால் பழக்கப் படுங்காலத்தில் இப்பறவை தேர்ந்த விகடகவியாகவே மாறுகின்றது.

காட்டிலிருக்குங் காலத்தில் இது தன் இயற்கையால் இஷ்டமான அநேக அற்புதத் தொழில்களைச் செய்யும். நன்றாகப் பாடுங்காலத்தில் பாடகர்கள் அபிநயம் முதலியன செய்வதுபோல இஃது அங்குமிங்கும் ஓடியும் ஏறி இறங்கியும் அநேகவிதமாக இறக்கை விரித்தல் முதலியற்றைச்செய்து தான் அதை அனுபவித்துப் பாடுவதாகக் காட்டும். தன் விகட சக்தியை முன்னிட்டுக்கொண்டு இது வேடிக்கையான காரியங்களைச் செய்யும். வேடர்களைக் கண்டுவிட்டால் சிற்சில சமயங்களில் அவர்கள் உத்தேசித்துவரும் பக்ஷிகள்போலச் சப்தித்து, அவைகள் அருகில் இல்லாவிடினும், அவர்களை வீணாகத் தேடும்படி செய்துவிடும். வேறு சில ஸமயங்களில் பக்ஷிகள்கூட இதன் ஓசையைக் கேட்டுத் தமது காதலர் அல்லது காதலிகள் அழைப்பதாக எண்ணி மோசம்போவதுமுண்டு. மற்றும் சில ஸமயங்களில் இப்பறவையின் குரலைக்கேட்டு ராஜாளி வருகிறதென்றெண்ணி யஞ்சிப் புதரில் சென்று ஒளிந்துகொண்டு பறவைகள் ஏமாறுவதும் உண்டு.

இவ்விகடப்பறவைக்கு மிகுந்த தைர்யமுண்டு. இது தன் முட்டையின்மேல் உட்கார்ந்து அடைகாக்குங் காலத்தில் மனிதன் உள்பட எந்தப்பிராணி வந்தாலும் ஸரி, பின்வாங்காது உடனே எதிர்த்து அடிக்கத் தொடங்கிவிடும். காட்டிலுள்ள கரும் பாம்பே இதற்கு முக்கிய விரோதி. அதைக் கண்டுவிட்டால் இப்பறவை அதைத் துரத்திச்சென்று அதன் கடிக்கு அகப்படாது அதன் தலையில் மூக்கால் கொத்தி அதைக்கொன்றுவிட்டு, மரத்தின் உயர்ந்த கிளைமேல் போய் உட்கார்ந்துகொண்டு வெற்றிப்பாட்டுப் பாடுவதுபோல உத்ஸாஹமாகப் பாடும்.

கூட்டில் அடைபட்டு வளர்க்கப்படுங்காலத்தில் இஃது அடையும் தேர்ச்சிக்கு வரம்பேயில்லை. யஜமானன் நாயைக் கூப்பிடுவதுபோல இது ஈசலிடும். உடனே நாய் எழுந்து வாலைக் குழைத்துக்கொண்டு ஓடிவரும். கோழிக்குஞ்சு வருந்துவதுபோலக் கதறும். இறகை விரித்துக்கொண்டு மிகுந்த ஆவலோடுபெட்டைக்கோழி ஓடிவந்துவிடும். நாய் குலைத்தல், பூனை கத்துவது, கைவண்டி ஓசை, எல்லாவற்றையும் உள்ளதுஉள்ளபடி இப்பறவைசெய்துகாட்டும். பாடும் பறவைகளின் பாட்டை இதுவெகு அழகாகப் பாட அவைகள் வெட்கி நிற்கும். ‘ஓடுபவரைக் கண்டால் துரத்துபவருக்கு எளிது’ என்பதற்கு ஏற்ப இந்த ஸமயத்தில் இவ்விகடப் பறவை அதிக சிரமத்துடன் பாடி அவைகளைத் தலையெடுக்கவொட்டாது தடுத்துவிடும். இம்மாதிரி பாடுங்காலத்தில் காட்டில் செய்வதுபோல இது இறக்கை முதலியவைகளை அசைத்து அதன் மூலமாகப் பாட்டிற்குத் தாளம்போட்டு ஆடுவதுபோலக் காணப்படும். அற்புதமாகப் பாடும் திறனும், விகடம் செய்யும் திறனும் இப்பறவைக்கு அமைந்திருக்கின்றன.

17 SEP 1910 MADRAS.

[இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

1. யானை	6. குதிரை
2. குரங்கு	7. மயில்
3. கரடி	8. கீரிப்பிள்ளை
4. நெருப்புக்கோழி	9. மீன்கொத்தி
5. பாம்பு	10. ராஜாளி

போதக்குறிப்புகள்

(இக்குறிப்புகளுள் சிற்சில எல்லா வியாஸங்களிலும் விஸ்தரிக்கமுடியாமலும் இருக்கலாம்.)

1. தோற்றம் — அங்கங்களின் உபயோகங்கள்—பொதுக்குணம் முதலியன.
2. காணப்படும் இடங்கள்.—பொது மாறுபாடுகள்.
3. இனங்கள்.—வேற்றுமை ஒற்றுமைகள்.
4. பிடித்துப் பழக்கும் விதங்கள்.
5. காட்டிலிருக்குங்கால் இருக்கும் ஸ்வபாவம்.
6. பிடிபட்டபின் உள்ள ஸ்வபாவம்.—அறிவுக் கதைகள்.
7. உபயோகம்.]

நித்திரை:—க்ஷீணமடைகிற உறுப்புகள், நித்திரையால் யதாஸ்திதிக்கு வருகின்றன. போஜனம் கிரமமாய் ஜீரணமாகும். நித்திரா பங்கத்தால், தேக சவுக்கியம் கெடுவதுமன்றி, புஜித்த அன்னபானாதிகளாலும் செவ்வையாய் தகன மாகாமல் பலவித ரோகங்கள் ஜனிக்கும். மனோசஞ்சலமும், தேகஆயாஸமும் நித்திரையால் நீங்கிவிடும். கஷ்டப்படுவோர் விசேஷமாயும், சுகானுபவிகள் அற்பமாயும் நித்திரையை அபேக்ஷிக்க வேண்டியது.

பிரதிதினம் 6, 7-மணிநேர நித்திரை தேகத்துக்குப் போதுமானது. அதிக நித்திரை, பகல் நித்திரை இவைகள் தேகசவுக்கியத்தை விகற்பப்படுத்தும். இராத்திரி 10-மணிக்குச் சயனத்துக்குச் சென்று பிராதக்காலம் 5-மணிக்கு எழுந்திருந்து வெளியில் போய் சுகசஞ்சாரஞ் செய்துகொண்டு வருவதில் தேகசவுக்கிய முண்டு. பகல் போஜனம் செய்த உடனே காணுகிற நித்திராசோகத்தை மெதுவில் விலக்கி விடுவதே உத்தமம்.

பொருட்காக்ஷிகளும் அவைகளின் பிரயோஜனங்களும்

EXHIBITIONS AND THEIR USES

சென்ற சில நூற்றாண்டுகளாக, பிரான்ஸ், அமெரிகா, ஜர்மேனி, இங்கிலாந்து முதலிய அன்னிய நாடுகள், கைத்தொழில், கிருஷித்தொழில்முதலானதொழில்களில்மிதமிஞ்சினசாமர்த்தியமுள்ளவர்களெனப்பெயர்வாங்கிவிட்டார்கள். உதாரணமாய் பிரான்ஸ் தேசத்தவர்கள், அவர்களுடைய வாசனை சாமான்களிலும், நவீன உடைகளிலும், சித்திரவேலைகளிலும், பார்ப்போர் கண்களைக் கவரச் செய்யும் சில்லரை சாமான்களிலும் அவர்களைப்போல் எவர்களாலும் செய்யமுடியாதெனப் பெயர் வாங்கிவிட்டார்கள். அமெரிகர்களோ தையல் வேலைகளையோ, எழுத்துவேலைகளையோ லக்ஷணமாயும் சீக்கிரத்திலும் செய்துமுடிக்க சிறு இயந்திரங்களை உற்பத்தி செய்து வருவதிலும், உடுப்புகளுக்கு அபூர்வமான புள்ளிபோட்ட துணிகளை இயந்திரங்களால் செய்து வருவதிலும், கிருஷித்தொழிலை நவீன முறைகளால் நடத்துவதிலும், நோய்களுக்கு மருந்துகள் செய்வதிலும் அதிசாமர்த்தியர்களென்று பெயர் வாங்கி விட்டார்கள். ஜர்மானியர்களோ வெடிகுண்டுகள், பீரங்கிகள் முதலான யுத்தாயுதங்களைச் செய்வதிலும், பற்பல இடங்களுக்கு வேண்டுமான வேடிக்கையான தட்டுமுட்டு சாமான்கள் செய்வதிலும், உடுப்புகளுக்கு வேண்டிய பலதினுஸ் செக்குகள் உற்பத்தி செய்து வருவதிலும் அவர்களுக்கு ஈடு எவர்களுமில்லை யென்று பெயர் வாங்கி விட்டார்கள். ஆங்கிலேயர்களோ பலதினுஸ் கச்சை துணிகள், மல்கள், மஸ்லின்கள், உரோமங்களால் செய்யப்படும் பலதினுஸ் ட்வீட்கள் செய்வதிலும் படங்கள் எழுதுவதி

லும், ரணவைத்தியர்களுக்கு வேண்டிய ஆயுதங்கள் செய்வதிலும், நெசவு இயந்திரம் முதலான இயந்திரங்கள் செய்வதிலும், பலநோய்களுக்கான மருந்துகள் செய்வதிலும், போர்க்கப்பல்கள் செய்வதிலும் அதிசாமர்த்தியர்களென்று பெயர்வாங்கி விட்டார்கள்.

மேற்சொல்லியவாறு அந்தந்தத் தேசத்தியவர்கள் அவரவர்கள் புத்தி, யுக்தி, சாதுர்யங்களால் செய்துமுடித்த சாமான்களை, பிரதமமாக அவரவர்கள் தேசங்களின் பிரபல ஸ்தலங்களில் காக்ஷிசாலைகளை ஏற்படுத்தி, தேசத்திலுள்ள கைத்தொழிலாளிகளுடையவும் இதரர்களுடையவும் புகழ்பெற்றுப் பலதேசங்கள் அறிய பிரவித்திசெய்து வருவதுடன், தாங்களும் விருத்தியடைந்து வருகிறார்கள். அன்றி மேற்படி தேசங்கள் நாகரீகத்தில் விசேஷ விருத்தி பெற்றவைகளானதால், பலதேசத்தியவர்கள் சாமார்த்தியங்களை ஒப்பிட்டுப் பார்க்க, பலதேசத்தியவர்கள் ஒன்றுகூடி, பொதுப் பொருட்காக்ஷிகள் அந்தந்தத் தேசதலைநகரங்களில் நடத்தி, சரிபார்த்து, ஒருவரையொருவர் போட்டி போட்டு, விருத்தியடைந்து வருகிறார்கள். இவ்வாறாக அந்நிய நாட்டார்கள் கைத்தொழில்களிலும் கிருஷித் தொழில்களிலும் ஒருவரோடொருவர் போட்டி போட்டு, விசேஷ விருத்திபெற்று, அளவற்ற புகழையும் செல்வத்தையும் பெற்று விட்டார்கள்.

நமது இந்தியாதேசமோ, ஒரு காலத்தில், மேற்கண்ட எல்லா அந்நியநாட்டாரும் மஹாநாகரீகம் பெற்ற தேசமென்று கருதி, நம்மவர்களின் அபூர்வ கைத்தொழில் வேலைகளைக் கண்டு மெச்சி, நம்மவர்களால் செய்யப்பட்ட வஸ்துக்களை அபார பொன் நாணயங்கள் கொடுத்துவாங்கி வியந்தார்களென்றாலும், நாம் பல நூற்றாண்டுகளாக அவ்விதமான புகழ்களை இழந்து, நமது கைத்தொழில்களை மறந்து, நாசமடைந்து விட்டோம். ஆனால் இப்பொழுது சில வருஷங்களாக நூதன எழுச்சி தோன்றி, நமது தேசத்தில் கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாய் பலமான பிரஸ்தாபங்கள் நடந்து வருகின்றன. அன்றி ஆங்காங்கு சில கைத்தொழிற்சாலைகள், நூல் நெசவு இயந்திர ஸ்தாபனங்கள் முதலியவைகள் ஸ்தாபனமாகி வருகின்றன. மேலும் சென்னப்பட்டணத்தில் ஓர் கண்ணாடி தொழிற்சாலையும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

அந்நிய நாட்டார்களை அனுசரித்து கைத்தொழில் அபிவிருத்தி விஷயமான பிரஸ்தாபங்கள் நடத்திவர வருஷா வருஷம் கூட்டங்கள் கூடி வருவதுடன், கூட்டங்களை அனுசரித்து அவ்வவ்விடங்களில் செய்துவரும் கைத்தொழில் பொருள்களையும் சேகரித்துபொருட்காக்ஷிகளை நடத்திவருகிறார்கள். அவ்விதப் பொருட்காக்ஷிகளை தொழிலாளிகளும் இதரர்களும் உற்சாகத்தோடு நடத்திவர ஆவேசிகளாய் ஆகிறார்களென்று நாம் பார்த்து வருகிறோம். ஆகவே நம்மவர்கள் ஒருகாலத்தில் கைத்தொழில் வேலைகளிலும், கிருஷி வேலைகளிலும், வைத்திய வாகடங்களிலும், அஸ்திர சாஸ்திர வேலைகளிலும், உலோஹங்களை சேகரிக்கும் சுரங்க வேலைகளிலும், சித்திரமெழுதும் வேலைகளிலும் மஹாநிபுணர்களென்று அந்யர்களால் மெச்சப்பட்டவர்களாயிருந்தாலும், இப்பொழுது நாமடைந்திருக்கும் மஹாபரிதாபமான ஹீனஸ்திதியையுணர்ந்து, நாம் மேலும் மேலும் விருத்திக்கு வரும் வழிகளை நாடி தகுந்த முயற்சியெடுத்து, மேற்சொல்லியவாறு நவீன நாகரீக வழிகளை அனுசரித்து, அவ்வவ்விடங்களில் கூடிப்பேசும் வழக்கங்களையும் பொருட்காக்ஷி நடத்தும் முறைகளையும் கைவிடாது நடத்திவரவேண்டியது அத்யாவசியமாகும்.

D. நடேசய்யர்.

OFFICE OF … BOOKS. REGISTERED 17 SEP 1910 MADRAS.

பொறுமை

FORBEARANCE

'பொறுமை' என்பது 'வெளிக்காட்டாதிருத்தல்' எனப்பொருள்படும். தமக்கு ஒருவர் காரணத்தைக் கொண்டோ, அல்லது காரணம் ஒன்றுமில்லாமலிருக்க அறியாமையாலோ அல்லது கொடுமையாலோ செய்த தீங்கைத் தாம் மனத்தில் கொண்டு, தாமும் அவர்க்கு அவ்வாறே செய்பவேண்டும் என்ற எண்ணமும் கொள்ளாதிருத்தல், பொறுமையின் லக்ஷணமெனப்படும். அவ்வெண்ணத்தை மனத்திலே அடக்கஞ் செய்யும்படி செய்தல் பொறுமையின் முதல்வழி. பின் அவ்வடக்கத்தால் யாவர்க்கும் துன்பமியற்றாது இருத்தல் இதன் செயற்கை.

தமக்குத் துன்பஞ்செய்தவற்கு துன்பஞ் செய்வது ஓர் அதிசயமாக மாட்டாது. அது மிருகங்களாலும் முடியும். மனிதனு மவ்வாறு செய்வானாகில் அவனுக்கும் மிருகத்திற்குமுள்ள வேற்றுமை யாது? மூளையிருப்பதின் பயன் என்ன? காரண காரியமறியும் திறமை அவனுக்கேன்? தமக்குத் துன்பஞ் செய்தவற்கும், துன்பஞ் செய்யாது இருத்தல் தான் பெருமை. தமக்குத் துன்பஞ் செய்தான் என்னும் பாவம், எண்ணத்திலேயே இருக்க அவனுக்குக் கெடுதி செய்யாதிருப்பது பொறுமைதான்; ஆயினும், தமக்குச் செய்த துன்பத்தை மனத்திலும் வையாது, கனவிற்கண்ட பொருள் மறுநாள் விளங்காததுபோல், அவர் செய்த தீங்கை அப்பொழுதே மறந்துவிடல் பொறுமையிலும் பொறுமை. மறந்தது மாத்திரமன்றி, அத்துன்பஞ்செய்தார்க்கும் இன்பமே செய்யப் புகுவது அதனினும் சிறந்த பொறுமை. அந்நிலைமையே அன்பெனும் பெயரோடு விளங்கும். அக்காலத்து உலக ஸுக துக்கங்களுக்குப் பாடுபடும்படிச் செய்து தெய்வீகத்தன்மையில் புகுத்தும் ஸாதனமாகும். அது பிறவியின் பயனை அடையும்படிச் செய்ததாயிற்று.

இது நிற்க, கோபம் முதலிய தகாத குணங்கள் விளங்கும் காலத்து பொறுமை வேண்டும் என்று சொல்வார்கள். அக்காலத்தில் 'பொறுமை' என்னும் பதத்தை 'அடக்கல்' என்னும் பொருளில் உபயோகிக்கிறார்கள். அதாவது, கோபமுதலிய குணங்களை மனத்திற்குள் ஒடுக்கவேண்டுமென்றும், அதற்கு நிதானம் வேண்டும் என்றும் கூறுவர். நிதானம் வர, மனவமைதி உண்டாகும். மனவமைதி வர காரண முதலியன தெரியவரும். காரணம் தெரிந்ததும், தாம் செய்தது தவறெனப்பட்டால் கோபத்தை வெளிக்காட்டாதிருந்தோமென்னும் தெளிவு உண்டாகும். தாம் கோபங் கொண்டதற்குக் காரணம் ஸரியாக இருந்தது என்று பட்டால், அதாவது தாம் கோபங் கொண்டது நியாயமென்று பட்டால், அக்கோபத்தை வீண் வியவகாரங்களில் ஓங்காது நியாயவழியிற் செல்லச் செய்யும். இவ்வழியெல்லாம் மனத்தை ஒடுங்கச்செய்யும் ஸாதனமாகும். மனத்தை ஒடுங்கச்செய்வதும் தனக்கு மனத்தை வச்யப்படுத்தும் பாதையாகையால் மறுமைக்கும் வழியைக்காட்டும். ஆகையால் இவ்வழியிலும் பொறுமையின் பயன் எய்தப்படும் என்பது நிஸ்சயமாயிற்று.

மேலும் தாம் நன்னிலைமையிலிருக்க, கீழ் ஒருவன் தம்மை ஏளனஞ் செய்யின் எவ்வாறு பொறுப்பதென ஐயமுண்டாகலாம். அப்பொழுதும் பொறுத்தல் கடனாகும். அவர் பொறுப்பது, அவரது எதிரியானவன் இயற்கை ஸ்வபாவத்தில் நல்லவனாகில் 'அவரை ஏன் ஏளனஞ் செய்தோம்' என்று எங்கும்படிச் செய்யும். அன்றிக் கொடியவனாகில், சித்த ஸ்வாதீனத்தில் இருக்குங்காலத்தொருவேளையேனும் 'ஏன் நாம் செய்தோம்' என்று எண்ணுவான். அவ்வாறெண்ணியவன் பின் கெடுதி செய்ய எண்ணான். அவ்வாறுமின்றி அவ்வெண்ணஞ் சிறிதும் கொள்ளாதவனாகில் அவனோடு சேர்ந்து துன்பம் புரிய ஒருவருஞ் சேராரென்

• ••

பது முதலில் முடியாவிடினும் முடிவில் முடியும். பின்யாவராலும் தள்ளப்பட்டமையால் கெடுதி செய்ய முடியாதாகிவிடும். ஆகையால் பொறுமையே பெருமையை விளங்கச்செய்யும். இதனால் நாம் நன்னிலையிலிருந்து நம்மால் எதிர்க்க முடியுங்காலத்திலும் நமது பொறுமை நம்மைக் காவாதிருக்க முடியாது.

இவ்வெண்ணங்களை எல்லாங் கொண்டே திருவள்ளுவர்,

'அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்தற் றலை'

என்றார். அதாவது தன்னை நின்று வெட்டுவோர்க்கே நிற்க இடம் தரும் பூமியைப்போல் தம்மை இகழ்ந்து அதனால் தமக்குக்கேடு உண்டாகும்படிச் செய்பவர்களை அவர்செய்த தீங்கிவிருந்துப்பொறுத்தல் முதல்தருமமாகும் என்றார். மேலும் உயர்குடிப் பிறந்தார் (அதாவது தலையாயார்) இடத்திற்றான் அக்குணம்பொலியும் என்பதும் த்வனிக்கும்படிக் கூறினர். மேற்குடிப்பிறந்தார்க்கு அக்குணமின்றேல் குலம் சாய்ந்துவிடும் என்பதும் கொள்ளப்படும்.

மன்னருக்கும் பொறையுடைமை மிக வேண்டும். அது அருளுடைமையை யூட்டி சிஷ்டபரிபாலனத்திற்கு வழிகாட்டும். அன்றியும் வழிதப்பிகுணங்கெட்டுநல்வழிவிட்ட தீயர்களுக்குத் தக்கதண்டனைமாத்திரம் அவர்க்கிடல் அவனுக்குப்பெருமை உண்டாக்காது. தண்டித்ததும் பொறுத்து வழி தப்பினவர்களை நல்வழியில் கொண்டுவர முயற்சிகொண்டு அவர்களை மேல்வழியில் புகுத்தலே அரசனது பெருந்தன்மையையும் அருளுடைமையையும் காட்டும். இதற்குப்பொறுமைவழிகாட்டும். அன்றியும் ராஜாங்க விஷயங்களில் நியாயங்களை அறிய நிதானமே முக்கியமாக வேண்டியது. உலகத்தாரது ஸுக துக்கங்களுக்குக் காரணமாகிய சட்டங்கள், ஒழுங்குகள் நடத்துவதில் முன்பின் யோசித்து அநுபவ வழியை ஒட்டிச் செய்வதற்கு நிதானம் முக்கிய ஸாதனம். நிதானமும் பொறுமையின் பால்பட்டதால் பொறுமை அரசற்கு இன்றி அமையாதது. அவ்வாறே அது நியாய வாதிகளுக்கும் நியாயாதிபதிகளுக்கும் இன்றியமையாததென அறியலாம். இவையெல்லாம் இம்மைப்பாற்பட்டன.

'பொறுமை' என்பது 'அடங்குந்தன்மை' என்று கூறினோம். பின்னது மனமடங்கலின் வழியென்றும் இம்மைக்கு மறுமைக்கு முதவியானது என்றுங் கூறப்பட்டது. இங்கது விரிந்தபொருளில் கொள்ளப்பட்டது. படவே அருள், அன்பு முதலிய குணங்கள் அதன் விரிவில் மயங்கிவிடும். ஆயினும் தமக்கின்பம் துன்பம் எதுசெய்யினும் வெளிக்காட்டாதிருத்தலாகிய மனோநிலைமையே பொறுமை என்று சொல்ல வேண்டுமென்று தோன்றுகிறது. மேலோர் செய்த நன்மையைக் காட்டுவது, உலகிற்கு ஒக்கும்; மேலும், அது நற்பிறவிக்கு ஆளாக்கும். கீழ்மையைக் கூறல் அது கீழ்ப்பிறவிக்கு ஆளாக்கும். புண்ணியமும் பாவமும் அற்ற நிலையே பிறவியறச் செய்யும். அதனால் தனக்குச் செய்யும் கீழ்மையையும் மேன்மையையும் எண்ணாதிருத்தல் தான் பொறுமையின் உயர்ந்த நிலையாகும். அதாவது, மனனுவது கீழ்மை மேன்மை என்கிற பாவங்களால் அசைக்க முடியாது ஒடுக்கப்பட்டது என்பது விளங்கும். அதனால் பொறுமையின் நிலைமைப் பெறப்பட்டது. இவ்வளவு விரிவும், உயர்வும், பொருளும் வாய்ந்த பொறுமை என்னும் பதத்தை, 'ஒருவர்க்குச் செய்த கெடுதியை வெளிக்காட்டாதிருத்த'லென்னும் பொருளில் கொள்ளுதல் அப்பதத்தின் பெருமையைக் குறைக்கும். பொறுமை என்பது விரிந்த அரும்பெரும் நிலையைக்காட்டும் மொழியென அறியப்படும்.

இனிப் பொறுமையின் ஸ்வபாவத்தைக் காட்டும் அநுபவத்தில் சில கூறுவோம்:—காகாஸுரன் தன்மனைவியின்பால்செய்ததவறை மன்னித்த இராமர்; நக்ஷத்திரகனும் விசுவாமித்திர

னும் வருத்த அவர்க்கே இன்பஞ்செய்த ஹரிச்சந்திரன்; தமக்குக் காட்டிலிருக்கத் துன்பஞ்செய்த துரியோதனன், ராக்ஷஸர்கள் கைகளில்கப்பட்டுக் கஷ்டப்படும்போது, அவனை மீட்டுவரும்படிச்செய்த தர்மபுத்திரர்; தனக்குத் துன்பஞ் செய்த விசுவாமித்திரர்க்கு நன்மையையே செய்த வசிஷ்டர்; ஊரையெல்லாம் எரிக்கிரையாக்கவும் மௌனமாயிருந்த ஜனகர்; யுத்தஸந்நதமாய் பாண்டவ கௌரவ ஸேனை நிற்க துரியோதனனுக்கு நல்லமுஹூர்த்த மிதுதான் என்று மெய்யன்போடு கூறிய ஸஹாதேவன்; ஒட்டக்கூத்தன் தன்பால் கொண்ட பகையால் அவனைக் கொல்லச் சென்று முடிவில் அவனைத் தழுவிய புகழேந்தி; பெண்களது கற்பைக் காக்கக் கையையும் வெட்டியளித்த பொற்கையான் மாறன்; இவர் முதலானவர்களது காதைகளின்மூலமாகப் பொறுமையின் ஸ்வபாவத்தையும், அதன் விரிவையும், பெருமையையும், அது மனதை ஒடுக்கி மேல்வழிக்கு அழிவில்லா ஸாதனமாதலையும், இவையனைத்தையும் அறியலாம்.

வா. சேஷகிரி.

வியாயாமம்:—காலையிலும் சாயரக்ஷையிலும் வெளியில்போய்க் காற்றோட்டமாய் உலாத்திக்கொண்டு வருவதில், தேகத்தில் ரத்தம் செவ்வையாய்ப்போய்ப் பரவும், மாம்சாதிகளும் தாருட்டியமடையும். இல்லாவிட்டால் தினே தினே சோம்பல் அதிகரித்து முடிவில் இருந்த ஸ்தானத்தைவிட்டு எழுந்திருப்பதற்கே கஷ்டமாயிருக்கும். முக்கியமாய்வீட்டிலிருப்பவர்களும், வீட்டிலிருந்துவேலை செய்கிறவர்களும், இந்த விஷயத்தை மறக்கலாகாது. பனிக்காலத்தில், பனிநின்றபிறகு உலாத்தவேண்டியது. நடப்பதே நல்லது, நடக்க தாருட்டியமில்லாதபோது, குதிரைமேலேறிப்போகலாம், தோள்களைப் பின்னுக்குவைத்து, மார்பை விசாலமாக்கிக்கொண்டு நடந்தால் நுரை ஈரலில் அதிக காற்றுச்சென்று ரத்தம் செவ்வையாய்ச்சுத்தியாகும். தோட்டவேலை, ஓடுதல், பந்து விளையாடல், கனமுள்ளவைகளை எடுத்து தூரவிட்டெறிதல், காலால் சுற்றுதல், தாண்டால் வாங்குதல் ஆகிய இவைகளாலும் தேகசவுக்கியம் பிறக்கும். வெளியிற் சென்று உலாத்துவதற்குச் சமயம் நேரிடாவிட்டால், கிரகத்துக் குள்ளாகவே நடந்து உலாத்தலாம். தோட்டவேலை சுகத்தைத் தருவது மின்றி, துஷ்டக்கிரித்தியங்களில் மனதைப் பிரவேசிக்கவொட்டாது. முடிவில் லாபத்தைத் தரும்.

பனைமரம்

PALMYRA TREE

முன்னுரை.—இது நம் நாட்டு நீண்டகாலத்துப் பயிர். இது கடற்கரையோரங்களில் விசேஷமாயுள்ளது. நஞ்சை வயல்களின் வரப்புகளிலுமுண்டு. நஞ்சையைப் பார்க்கிலும் புஞ்சையில் மிகுதி. இம்மரம் தஞ்சாவூர் ஜில்லாவின் சமுத்திரக்கரையோரத்திலும் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்திலும் அதிகம். இது வேலிக்காக பயிராக்கப்படுகிறது.

பூமி.—இதற்குமணற்பாங்கே யுரித்தானது. உப்பு சம்பந்தமானது விசேஷம். களிவாயிலும் வளரும். கரிசல் கப்பிக்கல் பூமி சிலாக்கியமானது.

பயிரிடல்.—கொல்லையின் வேலிக் கால்களை நன்றாய்க் கொத்தி வாங்கி, புற்பூண்டுகளை நீக்கி மழைகாலத்தில் அதாவது புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் இரண்டு மூன்று அடிக்கு ஒன்றிரண்டு கொட்டைகள் வீதம் போடுவார்கள். இவை முளைத்து வெளிக்கிளம்ப இரண்டு மூன்று மாதங்கள் செல்லும். இதற்கு எரு போடல், தண்ணீர் விடுதல், களையெடுத்தல் முதலிய செய்நேர்த்திகள் செய்கிற வழக்கமில்லை. இவைகள் யாவும் கிரமமாகச் செய்யும் பக்ஷத்தில் சீக்கிரத்தில் நல்ல பலனைக் கொடுக்கும்.

காய்ப்புக்கு வருங்காலம்.—பன்னிரண்டு வருஷத்திற்குமேல் முப்பது வருஷத்திற்குள் காய்க்கும். அதுமுதல் பதனிகட்ட ஆரம்பிப்பார்கள். சுண்ணாம்பு தடவின கலயத்திலிறக்குவதற்குப் ‘பதனி’ யென்றும், அது தடவாமல் வெறுங்கலயத்தில் இறக்குவ்தற்கு ‘கள்’ ளென்றும் பெயர் வழங்கி வருகிறது. ஒரு மரத்திற்கு ஐந்து, ஆறு கலயங்கள்போட்டு பதனி இறக்குவார்கள். நல்ல மரத்தில் பட்டணம் படி 4-வரைக்கும் பதனி கிடைக்கும். இந்தப் பதனியில் சர்க்கரை அதிகம்,

இதிலிருந்து சர்க்கரை, வெல்லம் செய்யப்பட்டு நமது நாட்டில் வழங்குகிறது. பனைவெல்லம் என்று வழங்குவது இதுவே. இது மருந்து செய்கிறதற்கு உபயோகப்படுகிறது. பனங்கற்கண்டும் இதிலிருந்துதான் எடுக்கிறார்கள். இது தைமாதத்தில் பூத்து, காய்த்து, ஆடிமாதம் வரையில் பழுத்து, நெற்றுக்கள் கீழே தானாகவே உதிர்ந்துகொண்டிருக்கும். தானாக உதிர்ந்த நெற்றுக்களாலே மரம் பயிராவதுமுண்டு.

வெல்லம்.—ஒரு குவார்ட்டு பதனியிலிருந்து கால் பவுண்டு வெல்லம் கிடைக்கும்.

காய்க்கவிடுதல்.—50 வருஷம் வரையில் பதனி கட்டுகிறார்கள். இரண்டு மூன்று வருஷத்துக்கு ஒருமுறை நிறுத்தி காய்க்கவிட வேண்டும்.

வகை.—ஆண் பெண் என்று இரண்டுவகை. ஆண்மரம் பூத்து மாத்திரம் இருக்கும். பெண்மரம் பூத்து அதில் காய்க்கும்.

பூ.—இதைச் சுட்டு கார்த்திகைமாதத்து கிருத்திகைக்குப் பைகட்டி அதில் நெருப்பு வைத்து பொறி பறக்கச் சுற்றுவார்கள். விறகுக்குமுபயோகம்.

காய்.—இதிலிருந்து நொங்கு எடுத்து விற்கிறார்கள். இதை சிலர் மாத்திரமன்றி மற்றையவர்களும் தின்கிறார்கள். இது குளிர்ச்சியுள்ளது. ஜீரணாஸ்தியாகாது. சில மாறுதல்களுடன் மலத்துடன் வெளிப்பட்டு விடும். இதன் ஜலம் குடிக்கிறதற்கு இனிமையாக இருக்கும். வேர்க்குருக்களுக்கு தடவினால் பொறிந்து போய்விடும்.

பழம்.—இதை ஏழை ஜனங்கள் தின்கிறார்கள். மாம்பழம் வாசனையுள்ளது; பித்தமானது. 'பசிக்குப் பனம்பழத்தைத் தின்றால் பித்தம் செய்கிறதைச் செய்யட்டும்' என்னும் பழமொழி உலகத்தில் வழங்குகிறது. சர்க்கரையிட்டு அவித்தும் உண்கிறார்கள்.

மட்டை.—ஒவ்வொரு மரத்திலும் 20முதல் 50 மட்டைகள் வரையிலும் இருக்கும். மாதத்திற்கு ஒரு மட்டைதான் விடும். சிலர் வருஷத்திற்கு 12 மட்டைகள் தான் வெட்டுகிறார்கள்.

ஓலை.—இது கணக்குப்புத்தகம் எழுத உபயோகப்படுகிறது. முன்காலத்தில் இதுதான், இக்காலத்துக் காகிதம்போல் வழங்கப்பட்டது. கூரைபோடுவதற்கும் அடைப்பு அடைப்பதற்கும் உபயோகப்படுகிறது. விறகாகவும் பிரயோஜனப்படுகிறது. பாய் பின்னுவதற்கும் விசிறி செய்வதற்கும் பயன்படுகிறது.

நார்.—மட்டையிலிருந்து நார் எடுக்கப்படுகிறது. சிலர் அரிவாள்கொண்டு கிழித்து எடுக்கிறார்கள். சிலர் ஊரவைத்தும் எடுக்கிறார்கள். நார் எடுப்பதற்கு இளமரத்தின் மட்டையே பிரயோஜனமுள்ளது. 10-பவுண்டு நார் ஒரு ரூபாய். இந்நாரைக்கொண்டு பிரஷ் (Brush) செய்யலாம்.

குறிப்பு.—இதன் குருத்து கறிகாய்களாகவும் உபயோகப்படுகிறது. இதன் கிழங்கும் தின்னுகிறதற்குபிரயோஜனப்படுகிறது. இதில் பிரயோஜனப்படாத வஸ்து ஒன்றுமேயில்லை, மரம் வீடுகட்ட பயன்படுகிறது. இதைப்போல பிரயோஜனப் படக்கூடிய மரம் வேறொன்றுமில்லை. ஆகையால் புஞ்சை பெருத்த விடங்களில் இதை வேலிக்கால்களில் பயிரிட்டால் நமது நாடுசெழித்து ஓங்க இது ஒரு சாதனமாகும்.

உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.
சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.
பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

அடங்காப்பிடாரி அடங்கியவிதம்

TAMING OF THE SHREW

(28-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு உபாத்தியாயரிடம் காதல் சென்ற இவளை, தான் கவனிப்பதே இல்லை என்று லூஸென்ஷியோ வேஷம் பூண்ட டிரேனியோ சபதம் செய்தான். தானும் பையான்காவிடமிருந்த தன் காதலை விட்டுவிட்டதாகவும், தான் ஹார்டென்ஸியோ என்பதாகவும், தான் ஓர் பணக்காரக் கைம்பெண்ணை மணந்து பெட்ரூகியோவிடம் அடங்காப்பிடாரியை அடக்கும் விதத்தைக் கற்றுக்கொள்ளப்போவதாகவும் சொல்லிப் பையான்காவை வெறுத்துக்கொண்டு லிகியோவும் போய்விட்டான். இதன் பின்னர் டிரேனியோ, லூஸென்ஷியோ பையான்கா இவர்களைக்கண்டு ஹார்டென்ஸியோவின் உபத்திரவம் நீங்கினதைக் கூறினான்.

ஒருவன் லூஸென்ஷியோ தகப்பன் வின்ஸென்ஷியோவின் வேஷம்கொண்டு பாப்டிஸ்டாவுக்கு வாக்களித்து பையான்கா கல்யாணத்தை நடத்திவைக்க வேண்டுமென்று முன்னரே எண்ணியிருந்த டிரேனியோவுக்கு இதை நடத்திவைக்கும் ஸமயம் வாய்த்தது. வழியில் போய்க்கொண்டிருந்த உபாத்தியாயர் ஒருவரைப் பிடித்து அவரை வின்ஸென்ஷியோ ஸ்தானத்திலிருக்க இசையும்படி அவன் செய்தான். பின்னர் அவருக்கு வின்ஸென்ஷியோ வேஷம்போட்டுப் பாப்டிஸ்டாவைப் பார்க்கும்படி செய்ய, பாப்டிஸ்டா ஸ்திரீதன விஷயங்களை லூஸென்ஷியோ வீட்டிலே தீர்மானிக்கலாம் என்றனன். அதன்படியே பையான்காவின் காதலனாகிய க்ரீமியோ வந்து சண்டையிட இடமில்லாது, டிரேனியோ லூஸென்ஷியோவாகவும், உபாத்தியாயர் வின்ஸென்ஷியோவாகவும் இருந்து ஸ்திரீதன விஷயங்களை அங்கு சென்று பேசத் தொடங்கினர்.

ஹார்டென்ஸியோ தன் கல்யாணம் முடிந்ததும் பெட்ரூகியோவைப் பார்க்க அவன் வீடு போய்ச் சேர்ந்தான். அப்போது தான் பெட்ரூகியோ கொஞ்சம் காதரீனுக்குத் தானே அன்புடன் தயார் செய்த உணவை அளித்துக் கொண்டிருந்தான். ஹார்டென்ஸியோவைக் கண்டதும் திடீரென்று உணவைக் கொண்டுபோகச் சொல்லிவிட்டு அவனுடன் தனக்குக் காதரீனிடம் இருந்த அன்பைப்பற்றிப் பேசத்தொடங்கிவிட்டான். இதற்குள் தையற்காரர்கள் காதரீனுக்கு உடைகள் தைத்துக்கொண்டுவர அவைகளில் குற்றங்கூறி அவர்களைக் கோபித்துக்கொண்டு துரத்திவிட்டு, காதரீன் இஷ்டப்படி போகாது, வெளியிற் சென்று தையற்காரர்களை ஸமாதானப்படுத்தி சரக்கை வாங்கிப் பணம் கொடுத்துவிட்டு வந்துவிட்டான். இம்மாதிரி எல்லாம் பெட்ரூகியோ காதரீனுக்கு மாறாகப் பிடிவாதம் பிடித்து அவளைத்தன் இஷ்டப்படி வரும்படி செய்துவிட்டதைக் கண்டு ஹார்டென்ஸியோ வியந்தான். இதற்குள் பையான்கா கல்யாண ஸங்கதி வந்து சேர எல்லோரும் பாடுவா நோக்கிப் புறப்பட்டனர். வழியில் பைஸாநகரத்து வின்ஸென்ஷியோ தன் மகன் லூஸென்ஷியோவைக் காண வந்து கொண்டிருந்தான். அவனையும் கூடச் சேர்த்துக்கொண்டு பாடுவாநோக்கிப் போகையில் வழியில் தான் கூறுவதற்குக் காதரீன் சற்றேனும் மாறாகப் பேசினால் பெட்ரூகியோ உடனே தன்னூர் நோக்கி அடிக்கடித் திரும்ப யத்தனித்து அவளுக்கு அடக்கம்வரும்படி பழக்கினான். அப்பொழுது தான், 'பெண் சாதி கணவன் கட்டளைக்கு அடங்கி நடக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் இருவருக்கும் ஸுகம் உண்டு. இல்லாவிடில் சண்டையும் கஷ்டமுமே ஏற்படும். இம்மாதிரியான அடக்கமே நம்மேல் மாறா அன்புகொண்டிருக்கும்பெட்ரூகியோவிரும்புகிறது. அவர் காதலுக்கும், நமக்காக அவர் கஷ்டப்பட்டு பணம் முதலியன ஸம்பாதித்து வருவதற்கும் நாம் ஏன் அவருக்கு அடங்கி நடக்கக்கூடாது? இவ்வளவுகாலம் இந்த ரஹஸ்யத்தை உணராது நாம் அடங்காப்பிடாரியானோமே' என்று காதரீன் மனதில் பட்டது. அதுமுதல் அவள் நல்லவளாகிவிட்டாள். இப்படி இவள் மாறிக்கொண்டு வருகையிலேயே இவர்கள் பாடுவாவில் புகுந்து லூஸென்ஷியோ வீட்டுவாயிலில் வந்துவிட்டனர். அங்கு வாயிலில் க்ரீமியோ, உள்ளே பையான்கா விஷயமாக என்ன நடக்கிறதோ என்ற ஆவலுடன் கவனித்துக்கொண்டிருந்தான். பெட்ரூகியோ வின்ஸென்ஷியோவுக்கு அவன் மகன் வீட்டைக் காட்டிவிட்டு ஒதுங்கினான்.

வின்ஸென்ஷியோ இங்கு வந்ததும், பையான்கா லூஸென்ஷியோ இருவருக்கும் ரஹஸ்ய விவாஹம்

நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அவன் வேலைக்காரன் வீட்டில் தயாராக இருக்க வந்து கொண்டிருந்தான். நிஜமான வின்ஸென்ஷியோவை வீட்டுவாயிலில் கண்டதும் நல்ல ஸமயத்தில் காரியம் கெட்டுப்போகிறதாக இருப்பதைக் கண்டு தான் வின்ஸென்ஷியோவைக் கண்டதே இல்லை என்று சாதித்து விட்டான். வின்ஸென்ஷியோ கோபத்துடன் தன் வேலைக்காரனை அடிக்க அவன் கூக்குரலிட்டுக் கொண்டே ஓடிப்போய் கல்யாணத்தை சீக்கிரம் முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யலானான்.

வேலைக்காரன் கூக்குரலைக்கேட்டு வீட்டுள் இருந்தவர்கள் வெளியில் வந்துசேர, வின்ஸென்ஷியோ தான் இன்னான் என்று சொல்லிக்கொண்டான். வேஷம்தரித்த உபாத்தியாயர், தான் வின்ஸென்ஷியோ என்றுமுன்வந்து, நிஜ வின்ஸென்ஷியோவைத் தடுத்தனர். வின்ஸென்ஷியோ லூஸென்ஷியோ வேஷம் தரித்த டிரேனியோவை இன்னார் என்றுகூற, அருகிலிருந்த க்ரீமியோ கிழவன் கூறுவது பொய் என்று சாதித்தான். இவ்வாறு நடப்பதைக்கண்டு கிழவனாகிய வின்ஸென்ஷியோ தன் மகனை டிரேனியோ கொன்றுவிட்டு அவன் ஸொத்தை அபகரித்து ஸுகமாக வாழுகிறான் என்று எண்ணி துக்கிக்கத் தொடங்கினான். உடனே அங்கிருந்தவர் எல்லோரும் இவனைப் பைத்தியக்காரன் என்று எண்ணி சிறைச்சாலையில் அடைக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தனர்.

இதற்குள் கல்யாணம் முடிந்து பையான்காவும் லூஸென்ஷியோவும் அங்குவந்து சேர எல்லாம் வெட்டவெளியாகிவிட்டது. பாப்டிஸ்டா தான் ஏமாந்த விதத்தை உணர்ந்தான். வின்ஸென்ஷியோவுக்கு டிரேனியோவின் தந்திரம் தெரியவந்தது; தனக்கு பாப்டிஸ்டா ஸம்பந்தம் கிடைத்ததை எண்ணி அவன் ஸந்தோஷம் அடைந்தான். மணவிருந்து நடத்த எல்லோரும் பாப்டிஸ்டா வீடுவந்து சேர்ந்தனர். ஒதுங்கி இருந்து இவைகளைப் பார்த்திருந்த பெட்ரூகியோவும் அடங்கிய காதரீனும் பையான்காவுக்குக் கல்யாணமான விதத்தைக் கண்டு வியந்துகொண்டு தம் தகப்பன் வீடு சென்றனர்.

அங்கு நடந்த விருந்தில் எல்லோரும் உல்லாஸமாகப் பேசிக்கொண்டிருக்கையில் பெட்ரூகியோவை பிடாரி புருஷன் என்று சிலர் பரிஹாஸம் செய்தனர். பாப்டிஸ்டாவைப்போன்ற சிலர் அவன் நிலையை எண்ணித் துக்கித்தனர். பெட்ரூகியோ உடனே எழுந்து, 'என்னை அப்படி எண்ணிவிடவேண்டாம். என் பெண்சாதி நல்லவளாகிவிட்டாள்' என்றான். அப்பொழுது தமது பெண்சாதிகளின் பணிவைப் பற்றி அங்கிருந்தவர் தர்க்கம் செய்ய முடிவில் பெட்ரூகியோ 'வீண்பேச்செதற்கு! நாம் நமது பெண்சாதிமாரை அழைப்போம். யார் உடனே வருகிறார்களோ அவள் கணவனே இந்தத் தர்க்கத்தில் ஜயித்தவனாவான்' என்று சொன்னான். லூஸென்ஷியோ பையான்காவுக்குச் சொல்லி யனுப்பினான். அவள் தனக்கு வேலையிருக்கிறது என்று சொல்லி அனுப்புவித்து விட்டு வராது இருந்துவிட்டாள். ஹார்டென்ஷியோ தன் கைம்பெண்ணுக்குச் சொல்லிவிட்டான். அவளும் ஏதோ சாக்குச் சொல்லி விட்டு வாராதிருந்தாள். உடனே பெட்ரூகியோ தன் பெண்சாதி அங்குவரும்படி உத்தரவு செய்ய, அவன் வேலைக்காரன் காதரீனிடம் அதைத் தெரிவித்தான். உடனே காதரீன் ஸபைக்கு வந்தாள். எல்லோரும் காதரீன் அடங்கிய விதத்தைக் கண்டு வியந்தனர்.

அப்பொழுது பெட்ரூகியோ தன் பெண்சாதியின் நற்குணத்தை இன்னும் நன்றாகக் காட்டுவதாகக் கூறி அவளை நோக்கி 'உன் தங்கையையும், கைம்பெண்ணையும் அழைத்துவா' என்று கட்டளை யிட்டான். சீக்கிரத்தில் அவள் அவ்விருவரையும் வாக்கு நயத்தால் ஸபையில் கொண்டு வந்து நிறுத்தினாள். இவ்விருவரும் தமது கணவர்களிடம் தம்மை அகாரணமாகக் கூப்பிட்டதைப் பற்றி ஏதோ குதர்க்கமாக வாக்குவாதம் செய்வதைக் கண்டுபெட்ரூகியோ காதரீனை நோக்கி 'இம்மண்ணைகொழுத்த மாதருக்குப் பார்யாதர்மம் இன்னது என்று கூறி இவர்களுக்குப் பணிவுவரும்படி செய்' என்று உத்தரவு செய்தான். அப்பொழுது காதரீன் சொல்லத் தொடங்கினாள்:—

'தெய்வமெனக் கொண்டாட வேண்டிய கணவனை எந்நாளும் எந்த அவஸரத்திலும் சற்றேனும் கடிந்து கொள்ளவே கூடாது. இவ்வாறு செய்தால் ஸ்திரீயானவள் தனது அழகை இழந்து ராக்ஷஸியாவாள். கோபிக்கும் ஸ்திரீயைக் கணவன்

ஒருநாளும் மதிக்கவே மாட்டான், தன் பெண்சாதி ஸுகமாக வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் 'திரைகடலோடி திரவியந்தேடும்' அன்பனாகிய கணவன், தன் பெண்சாதி தனக்குக் கீழ்ப்படிந்து நடந்து வீட்டில் சண்டை குழப்பங்களின்றி இருக்கத் தான் ஸுகம் அடையவேண்டும் என்றுதான் விரும்புவான். தமக்காக இவ்வளவு பாடுபடும் அன்பருக்கு ஸ்திரீகள் அடங்கி இருப்பதே, அவர்கள் உருவம், மிருதுவான தேகம் இவைகளுக்குப் பொருத்தமாக இருக்கும். எங்கு அடங்கி சாந்தமாக இருந்து ஸுகமாக இருக்கவேண்டுமோ அங்கு அடங்காப்பிடாரியாகி அவஸ்தைப்படும் ஸ்திரீகள் கொடிய பாபிகளே ஒழிய வேறில்லை. நானும் இத்தகைய பாபியாகத் தான் இருந்தேன். என் கணவன் அன்பால் நான் வழிக்கு வந்துவிட்டேன். இப்பொழுது அவருக்கு நான் எவ்விதத் தொண்டு செய்யவும் தயாராகவிருக்கிறேன். ஆகையால் நீங்களும் உங்கள் கணவர்களைக் கடிந்துகொள்ளாது அடங்கி ஸுகமாக வாழ்ந்திருங்கள்" என்று புத்திமதி கூறினாள் காதரீன். அங்கு ஸபையிலிருந்தவர்கள் காதரீன் வழிக்கு வந்ததையும் பெட்ரூகியோ தன் காரியத்தை முடித்துக்கொண்டதையும் எண்ணி எண்ணி வியந்துகொண்டு தத்தம் இருப்பிடம் சென்றனர்.

(முற்றிற்று.)

ஜாதிபேதம்.—தானாகவே பழுத்து விழுகிற பழம் அதிக் ருசியாயிருக்கும். பழுக்காத காயைப் பறித்துப் பின்னர் அதைப் பழுக்க வைத்தால், தானாய்ப் பழுத்த பழம்போல் அவ்வளவு ருசியாயில்லாமல் சுருங்கிப்போகின்றது. அதுபோலவே ஸர்வமும் ப்ரஹ்மமயம் என்ற அனுபவம் ஒருவனுக்கு உண்டாகும்போதுதான் ஜாதிபேதம் அநாவச்யமேயன்றி அதற்குமுன் அன்று; ஆனால் இந்த உத்தமமான ஞானநிலையை அடையாத வரையில் உயர்வு, தாழ்வு என்கிற பேதத்தை யொழிக்க ஒருவராலும் ஆகாதாகையால் ஒவ்வொருவரும் ஜாதியாசாரங்களை அநுஷ்டிக்க வேண்டும்.

இயற்கை அற்புதங்கள்

WONDERS IN NATURE

XVIII. விசிஷ்டகன அளவு

SPECIFIC GRAVITY

ஒரே பருமனுடைய அநேக வஸ்துக்களைத் தூக்கிப் பார்த்தால் அவை வெவ்வேறு கனம் உடையனவாகக் காணப்படும். ஒரேமாதிரி உருவும், அளவும் உள்ள பத்து ஸீஸாக்களை எடுத்து ஒன்றில் தண்ணீரும் மற்றொன்றில் எண்ணெயும், மற்றொன்றில் பாலும், மற்றொன்றில் பாதரஸமும் இதுபோன்ற ஒவ்வொன்றில் ஒவ்வொரு திரவ வஸ்துவையும் நிரப்பி ஒவ்வொன்றாகத் தூக்கிப் பார்த்தால் பாதரஸம் அதிக கனமுடையதாகவும், தண்ணீர் மத்ய கனமுடையதாகவும், எண்ணெய் குறைந்த கனமுடையதாகவும் காணப்படும். இதேமாதிரி ஒரே நீள, அகல, உயரமுடைய பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவைகளாலாகிய கம்பிகளையும் தூக்கிப்பார்த்தால் பொன் அதிக கனமுடையதாயும், ஈயம், வெள்ளி, இரும்பு, செம்பு முறையே குறைந்த கனங்கள் உடையனவாயும் காணப்படும். இம்மாதிரி ஒரே பருமனுள்ள அநேக வஸ்துக்களுக்கு வெவ்வேறு கனங்கள் காணப்படுவதற்கு ஒவ்வொரு வஸ்துவின் அணுக்களின் அடர்த்தியே காரணம். பொன்னின் அணுக்கள் மிக நெருங்கி நிற்றலால் அதன் கனம் அதிகமாயும், ஈயத்தின் அணுக்கள் பொன்னணுக்களைப்போல அடர்த்தியாக இராதபடியால், பொன் பருமனுள்ள ஈயம், கனத்தில் குறைந்தும் காணப்படுகின்றது.

இப்படி இருப்பதால் இவைகளுள் ஓர் வஸ்துவை மூலவஸ்துவாகக்கொண்டு அதன் மூலமாக அதனோடு அதே பருமன் உள்ள மற்றைய வஸ்துக்களின் கனத்தை ஒப்பிடலாம். இவ்வாறு செய்வதனால் ஏற்படக்கூடிய பலனைப் பின்னர் எடுத்து விவரிப்போம். இந்த மூலவஸ்து திரவவஸ்துவாக இருத்தல் வேண்டும். எடுத்துக்கொள்ளும் வஸ்துக்களுக்கு ஸமமான பருமனுடைய வஸ்து திரவ வஸ்துவில் கண்டுபிடிப்பது எளிது. மேலும், திரவ வஸ்துவின் தாங்கு குணத்தால் எடுக்கும் வஸ்துவின் அளவுள்ள திரவ வஸ்துவின் கனத்தை எளிதில் ஆர்க்கிமீடீஸ் ஸித்தாந்தப்படி அறிந்துவிடலாம். ஆதலால் எளிதில் அகப்படக்கூடிய திரவ வஸ்துவாகிய தண்ணீ

ரையே பிரகிருதி தத்வசாஸ்திரிகள் மூலவஸ்துவாக எடுத்துக் கொண்டிருக்கின்றனர். இதுவும் அல்லாமல் கனவிஷயங்களை எளிதாக அளக்கும் பொருட்டு ஒரு இடசதாம்ச அளவு பருமன் உள்ள சுத்தஜலத்தின் கனத்திற்குக் கிராம் என்று பெயர்கொடுத்து அதையே மூலகனமாக வைத்திருக்கின்றனர்.

மற்றைய வஸ்துவின் கனத்தைத் தண்ணீர் கனத்தொடு ஒப்பிடும் வகையை விசாரிப்போம். ஓர் வஸ்துவை எடுத்து அதன் கனத்தை முதலில் கண்டு பிடிக்கவேண்டும். பின் அதன் பருமன் உள்ள சுத்த தண்ணீரின் கனத்தைக் கண்டுபிடிப்பது. வஸ்துவின் கனத்தைத் தண்ணீரின் கனத்தால் வகுத்தால் வரும் எண்ணே இரு கனத்திற்கும் உள்ள ஸம்பந்தம். இம்மாதிரி ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒவ்வொரு எண் வரும். இந்த எண்ணுக்கே விசிஷ்டகன அளவு என்று பெயர். ஆகவே ஓர் வஸ்துவின் விசிஷ்டகன அளவு என்பது அதன் கனத்தை அதன் பருமனையுடைய சுத்த ஜலத்தின் கனத்தால் வகுத்தால் வரும் எண்ணே. ஒரு பருமனையுடைய வஸ்து அதன் பருமனையுடைய சுத்த ஜலத்தைப்போல் எம்மடங்கு கனத்தை உடையது என்பதை இது குறிப்பதால் இந்த எண்ணையே கனங்களை ஒப்பிடுவதில் முக்கியமாகக் கொள்ளலாம்.

ஒவ்வொரு வஸ்துவுக்கு ஒவ்வொரு விசிஷ்டகன அளவு உண்டு என்றோமே, அதைப் பின்வரும் அட்டவணை குறிப்பிக்கும் :—

பிளாட்டினம் ...	21	தங்கம் ...	19
வெள்ளி ...	$10\frac{1}{2}$	செம்பு ...	$8\frac{3}{4}$
இரும்பு ...	$7\frac{1}{2}$	ஈயம் ...	$11\frac{1}{3}$
பாதரஸம் ...	$13\frac{1}{2}$	துத்திநாகம் ...	$6\frac{4}{5}$
கண்ணாடி ...	3	தந்தம் ...	$1\frac{9}{10}$
பனிக்கட்டி ...	$\frac{9}{10}$	சடை ...	$\frac{1}{4}$
அலுமினியம் ...	$2\frac{1}{2}$	சாராயஸாரம் ...	$\frac{4}{5}$
		ஸமுத்ர ஜலம் ...	$1\frac{1}{10}$

தண்ணீர் மூலவஸ்துவாக இருப்பதால் அதன் விசிஷ்டகன அளவு 1 தான்.

இனி இந்த எண்களைக் கண்டுபிடிக்கும் வழியை எடுத்துக்கூறுவோம். இந்த விஷயத்தில் திட வஸ்துக்களை முதலிலும், திரவ வஸ்துக்களைப்பின்னரும் எடுத்துக்கொள்வோம். திடவஸ்துக்களை முழுகும் வஸ்துக்கள், மிதக்கும் வஸ்துக்களாகவும் பிரித்துக் கொள்வோம்.

முதலில் கண்ணாடி அடைப்பை வைத்துக்கொண்டு முழுகும் வஸ்துக்களைப்பற்றிக் கூறுவோம். திரவநிறைத்தராசின் கொக்கியில் கண்ணாடி அடைப்பைக் கட்டித் தொங்கவிடுவோம். அது 35-கனம் இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அதன் அடியில் தண்ணீரிருக்கும் ஓர் பாத்திரத்தைக் கொண்டு வந்து அது முழுகும்படி செய்வோம். தண்ணீருள் அது நிறையில் 22-கனம் உடையதென்போம். இப்படியாயின் அது முழுகுவதால் (35—22) அல்லது 13-கனம் இழந்தது. இதுதான் அதன்மேலுள்ள தாங்குகுணம்; அதாவது கண்ணாடி அடைப்பு பருமன் உள்ள தண்ணீரின் கனம் 13 என்றாயிற்று. ஆதலால் கண்ணாடியின் விசிஷ்டகன அளவு $35 \div 13$ அல்லது $2\frac{9}{13}$ என்பதாயிற்று. முன் கூறியவைகளைப் பின்வருமாறு குறிப்பாகக் காட்டலாம் :—



கண்ணாடி அடைப்பின் நிறை = அ கனம்
தண்ணீருள் „ „ = த கனம்

$$\left.\begin{array}{l}\text{தாங்குகுணம் அல்லது கண்ணாடி}\\ \text{அடைப்பின் பருமன் உள்ள}\\ \text{தண்ணீரின் நிறை}\end{array}\right\} = (\text{அ}-\text{த})\text{கனம்}$$

$$\left.\begin{array}{l}\text{ஆதலால் கண்ணாடியின்}\\ \text{விசிஷ்டகன அளவு}\end{array}\right\} = \frac{\text{அ}}{\text{அ}-\text{த}}$$

இனிச் சடையை வைத்துக்கொண்டு மிதக்கும் வஸ்துகளை எடுத்து விவரிப்போம். இதைத் தண்ணீரில் முழுகும்படி செய்யத்தக்க ஈயகுண்டு ஒன்றை எடுத்து, முதலில் சடை, ஈயகுண்டு இரண்டையும் வெவ்வேறாக நிறுக்கவேண்டும். முறையே அவை நிறையில் 8, 44-கனங்கள் உடையன என்போம்.

இவைகளை ஒன்றுசேர்த்து சிறிய நூலால் கட்டி திரவநிறைத்தராசில் தொங்கவிட்டுத் தண்ணீருள் நிறுப்போம். இவைகளின் மொத்த நிறை 16-கனம் என்போம். ஆகவே இரண்டின் பருமன் எவ்வளவோ அவ்வளவு பருமனுடைய தண்ணீரின் நிறை (52—16) அல்லது 36-கனம் என்றாகிறது. பின்னர் ஈயத்தைமாத்திரம் தண்ணீருள் நிறுப்போம். அதன் நிறை 40-கனம். ஆகவே அதன் பருமனுடைய தண்ணீரின் நிறை (44—40) அல்லது 4-கனம் என்பதாகிறது. ஆதலால் சடையின் பருமன் உள்ள தண்ணீரின் நிறை (36—4) அல்லது 32-கனமாக, சடையின் விசிஷ்டகன அளவு 8÷32 அல்லது $\frac{1}{4}$ என்று தெரியவருகிறது. இதைக் குறிப்பாகப் பின்வருமாறு எழுதலாம் :—

சடையின் நிறை = ச கனம்

ஈயத்தின் நிறை = ஈ கனம்

இரண்டும் சேர்ந்த நிறை = (ச + ஈ) கனம்

தண்ணீருள் இரண்டின் நிறை = த கனம்

இரண்டின் பருமனையுடைய தண்ணீரின் நிறை } = (ச + ஈ-த) கனம்

தண்ணீருள் ஈயத்தின் நிறை = ய கனம்

ஈயத்தின் பருமனை யுடைய தண்ணீரின் நிறை } = (ஈ—ய) கனம்

ஆதலால் சடையின் பருமனையுடைய தண்ணீரின் நிறை } = (ச + ஈ-த)(ஈ-ய) = (ச-த + ய) கனம்

சடையின் விசிஷ்டகன அளவு } = $\frac{\text{ச}}{\text{ச—த + ய}}$

இனி திரவ வஸ்துக்களின் விசிஷ்டகன அளவைக் கண்டுபிடிக்கும் வழிகளை எடுத்துக்கூறுவோம்: திரவ வஸ்துக்களுக்கு இயற்கையாக ஒரு ரூபமுமில்லை. அவை தம்மைத் தாங்கிநிற்கும் பாத்திரத்தின் உருவத்தையே கொள்ளும். ஆதலால் இந்த ஸ்வபாவத்தை முன்னிட்டுக்கொண்டு திரவ வஸ்துக்களின் விசிஷ்டகன அளவுகளை எளிதில் கண்டுபிடிக்கலாம். ஓர் விசிஷ்டகனஅளவை ஸீஸாவை எடுத்துக்கொண்டு அதை முதலில் தடைகட்டித் தண்ணீரால் நிறைத்து தண்ணீரின் நிறையை கண்டுபிடிக்க வேண்டும். இதேமாதிரி அந்த ஸீஸாவைக் காலிசெய்து நன்றாக உலர்த்தி, எந்தத் திரவத்தின் விசிஷ்டகன அளவு கண்டுபிடிக்க வேண்டுமோ அதனால் ஸீஸாவை நிரப்பி அந்தத்திரவத்தின் நிறையைக் கண்டுபிடிக்க வேண்டும். பின்னர் திரவத்தின் கனத்தை முன் கண்டுபிடித்த தண்ணீரின் நிறையால் வகுத்தால் அந்தத் திரவத்தின் விசிஷ்டகன அளவு கிடைக்கும்.

ஆர்க்கிமிடீஸின் ஸித்தாந்தத்தின்படி திரவவஸ்துக்களுக்கு எளிதில் விசிஷ்டகன அளவுகளைக் கண்டுபிடிக்கலாம். இப்பொழுது பாலுக்கு விசிஷ்டகன அளவு கண்டுபிடிப்போம் : பாலிலும் தண்ணீரிலும் கரையாத ஓர் வஸ்துவை, அதாவது கண்ணாடி அடைப்பை,எடுத்து அதன் நிறையை முதலில் கண்டுபிடிப்போம்: அதாவது அதன் நிறை 20-கனம் என்போம், தண்ணீருள் அதன் நிறை 8-கனம் என்போம்; ஆதலால் அடைப்பின் பருமனுள்ள தண்ணீரின் நிறை 12-கனம். பின்னர் பாலில் அடைப்பின் நிறை 6-கனம் என்போம், அதாவது அடைப்பின் பருமனுள்ள பாலின் நிறை 14-கனமாகிறது. ஆகவே பாலின் நிறை 14-கனம், அதே பருமனுடைய தண்ணீரின் நிறை 12-கனம். ஆதலால் பாலின் விசிஷ்டகன அளவு 14 ÷ 12 அல்லது $1\frac{1}{6}$ ஆகிறது. இந்த விஷயத்தைப் பின்வருமாறு சுருக்கி எழுதலாம் :—

கண்ணாடி அடைப்பின் நிறை = அ கனம்

தண்ணீருள் „ „ = த கனம்

ஆதலால் அடைப்பு அளவுள்ள தண்ணீரின் நிறை } = (அ—த) கனம்

பாலுள் அடைப்பின் நிறை = ப கனம்

ஆதலால் அடைப்பு அளவுள்ள பாலின் நிறை } = (அ—ப) கனம்

ஆதலால் பாலின் விசிஷ்டகன அளவு } = $\frac{\text{அ—ப}}{\text{அ—த}}$

"இவ்வாறு கண்டுபிடிக்கக்கூடிய விசிஷ்டகன அளவின் பயன் யாது?" என்ற கேள்வி பிறக்கும். அதன் விவரம் பின்வருவன :—

1. ஓர் வஸ்துவின் பருமன் தெரிந்தால், அதன் விசிஷ்டகன அளவு மூலமாக அதன் நிறையை உடனே கண்டுபிடித்து விடலாம். இப்பொழுது ஓர் துண்டு இரும்பின் பருமன் 5-இடசதாம்ச அளவு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இரும்பின் விசிஷ்டகன அளவு 7, அதாவது இரும்பு தன் பருமனுடைய தண்ணீரின் நிறையைப் போன்ற 7-மடங்கு நிறையுடையது. 5-இடசதாம்ச அளவுடைய சுத்தநீரின் நிறை 5-கனம். ஆதலால்

5-இடசதாம்ச அளவுடைய இரும்பின் நிறை 35-கனம்.

2. தாங்கு குணத்தைப்பற்றி விஸ்தரிக்குங்கால், வஸ்துவின் நிறை அதன் பருமனுடைய தண்ணீரின் நிறையைவிடக் குறைந்திருப்பின் வஸ்து மிதக்கும் என்று கூறியிருக்கிறோம். அதாவது ஓர் வஸ்துவின் விசிஷ்டகன அளவு 1-ஐ விடச் சிறிய எண்ணாக இருப்பின் அந்த வஸ்து தண்ணீரில் மிதக்கும், அதைவிடப் பெரிதாக இருப்பின் வஸ்து தண்ணீரில் மூழ்கும். பனிக்கட்டி, சடை இவைகளின் விசிஷ்டகன அளவுகள், முறையே $\frac{9}{10}$, $\frac{1}{4}$-ஆக இருப்பனவால் இவைகள் தண்ணீரில் மிதக்கும். மேலும் ஓர் வஸ்துவின் விசிஷ்டகன அளவு ஓர் திரவத்தின் விசிஷ்டகன அளவைவிடக் குறைந்து இருப்பின், அதன் நிறை அதன் பருமனுடைய திரவத்தின் நிறையைவிடக் குறைந்திருக்கும். ஆகவே அவ்வஸ்து அந்தத் திரவத்தில் மிதக்கும். முன்னுள்ள அட்டவணையிலிருந்து இரும்பின் விசிஷ்டகன அளவு 7; பாதரஸத்தின் அளவு $13\frac{1}{2}$. ஆகவே தண்ணீரில் மூழ்கும் இரும்பு பாதரஸத்தில் மிதக்கும். இம்மாதிரி ஓர் வஸ்து ஓர் திரவத்தில் மிதக்குமா அல்லது மூழ்குமா என்பதை அவைகளின் விசிஷ்டகன அளவுகளைக் கண்டதுமே அறிந்துகொள்ளலாம்.

3. ஓர் திரவத்தில் ஓர் வஸ்துவை மூழ்கவைத்தால் அதன் மேலுள்ள தாங்குகுணம் அதன் பருமனுடைய திரவத்தின் நிறைக்கு ஸமம். ஆதலால் திரவத்தின் விசிஷ்டகன அளவு அதிகமாக ஆக அதன் தாங்குகுணம் அதிகரிக்கும். ஆதலால் ஓர் வஸ்துவை ஓர் திரவத்துள் போட்டால் அதன் மேலுள்ள தாங்குகுணம் வஸ்துவின் மூழ்கிப பாகத்தின் பருமனையும், அந்தத்திரவத்தின் விசிஷ்டகன அளவையும் பொருத்தது. ஆகவே ஓர் மிதக்கும் வஸ்துவை அதிக விசிஷ்டகன அளவுடைய திரவத்தில் போட்டால் கொஞ்சம்தான் மூழ்கும். குறைந்த விசிஷ்டகன அளவுடைய திரவத்தில் போட்டால் அதிகமாக மூழ்கும். சடையைத் தண்ணீருள் போட்டால் எவ்வளவு அழுந்துமோ அவ்வளவு அது உப்புநீரில் அழுந்தாது; அவ்வளவுகூட அது பாதரஸத்தில் அழுந்தாது; ஆனால் அது தண்ணீரில் அழுந்துவதைவிட அதிகமாகச் சாராயத்தில் அழுந்தும். மேலும் அதிக விசிஷ்டகன அளவுடைய மிதக்கும் வஸ்துவை ஓர் திரவத்தில் போட்டால் அது அதிகம் அழுந்தும், குறைந்ததைப்போட்டால் அவ்வளவு அழுந்தாது. பாதரஸத்திலேயே இரும்பு (7), ஈயம் ($11\frac{1}{3}$), செம்பு ($8\frac{1}{2}$) இம்மூன்றையும் போட்டால் ஈயம் அதிகமாயும், செம்பு அதைவிடக் குறைந்தும், இரும்பு மிகக் குறைந்தும் அழுந்திமிதக்கும்.

4. திடவஸ்துவில் கலப்பிருக்கிறதா என்பதை வஸ்துக்களின் விசிஷ்டகன அளவை உணர்ந்தால் நாம் எளிதில் அறியலாம். இதனால்தான் ஆதியில் ஆர்க்கிமீடீஸ் என்ற தத்துவசாஸ்திரி ஸைரக்யூஸ் அரசன் கிரீடத்தில் இருந்த கலவையைக் கண்டுபிடித்தது. இப்பொழுது தட்டான் நம்மிடம் 152-கனம் உள்ள நகை ஒன்றைக் கொண்டுவந்து கொடுப்பதாகவும் அதில் செம்பு கலந்திருக்குமோ என்ற ஸந்தேகம் நமக்கு வருவதாகவும் வைத்துக்கொள்ளுவோம். அதைத் தண்ணீரில் நிறுப்போம். அது $142\frac{5}{8}$-கனம் இருக்கிறதென்போம். நல்ல பொன்னின் விசிஷ்டகன அளவு 19 ஆகையால் அது தண்ணீரில் $\frac{1}{19}$ தன் கனத்தை இழக்கவேண்டும். இங்கு இழந்த கனமோ $9\frac{3}{8}$ அல்லது $\frac{75}{8}$. இது நகை கனத்தில், $75 \div 8 \div 152$, அல்லது $\frac{75}{1216}$-பாகம். இது $\frac{1}{19}$ ஐவிட அதிகம். இதனால் நகையில் பொன்னோடு ஏதோ கலந்திருக்கவேண்டும் என்பது வெளியாகிறது. இதைப் பீஜகணிதப்படி பார்த்தால் 19-கனம் செம்பும் 133-கனம் பொன்னும் இந்த நகையில் கலந்திருக்கிறதென்பதை எளிதில் உணரலாம்.

5. ஒரே மிதக்கும் வஸ்து திரவங்களில் முழுகும் ஆழத்தைக்கண்டு அந்தத் திரவத்தின் விசிஷ்டகன அளவு அல்லது அந்த வஸ்துவில் வேறு ஏதாவது வஸ்துக்கள் கலந்திருக்கின்றனவோ என்பதை உணரலாம். ஓர் கண்ணாடி சோதனைக்குழாயுள் கொஞ்சம் பாதரஸம்விட்டு தண்ணீரில் போட்டால் அது நேராகமிதக்கும். அது எவ்வளவு ஆழம் முழுகுகிறது என்பதை அளப்போம். அது 10-இடசதாம்ச அளவு என்போம். அதையே சாராயத்தில்போட்டால் $12\frac{1}{2}$-இடசதாம்ச அளவுவரை முழுகும். உடனே சாராயத்தின் விசிஷ்டகன அளவு $10 \div 12\frac{1}{2}$ அல்லது $\frac{4}{5}$ என்று கூறலாம். இவ்வாறு பாதரஸ ஸம்பந்தமாக பால் நல்லதா, அல்லவா என்று கண்டுபிடிக்க ஓர் மிதப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பால்அளவை என்று பெயர். அதன் தண்டில் அது நல்ல தண்ணீரில் மூழ்கும் மேல்குறியும் நல்லபாலில் மூழ்கும் கீழ்க் குறியும் காணப்படும். இவைகளின் இடை அநேக ஸமபாகங்களாகப் பகுக்கப்பட்டிருக்கும். பால்காரன் கொண்டுவரும் பாலை சோதனைக்

குழாயுள் விட்டு அதனுள் பால் அளவையைப் போடவேண்டும். பால் குறிப்பில் நின்ருல் பால் சுத்தமானது. நடுவில் எத்தனை அளவு நிற்கிறதோ அதற்கேற்ப தண்ணீர் பாலோடு கலக்கப் பட்டிருக்கிறதென்று அறியலாம். இப்பொழுது இரு குறிப்பிற்கும் இடையில் 10-ஸமபாகம் இருந்து அவைகளுள் 2-ஸமபாகம் பாலில் முழுகினுல், கொடுத்த பாலில் $2 \div 10$ அல்லது $\frac{1}{5}$-பாகம் தண்ணீர் என்று அறிந்து விடலாம். இதுபோலவே சில வியாதிகளில் மூத்திரத்தின் விசிஷ்டகன அளவு கண்டுபிடிக்கும் யந்திரமும் உண்டு. மற்றைய திரவங்களின் விசிஷ்டகன அளவு கண்டுபிடிக்கும் யந்திரங்களும் உண்டு. இவைகளுக்குப் பொதுவாக திரவ அளவை என்று பெயர்.

ஆகவே வஸ்துவின் விசிஷ்டகன அளவுகளை அறிவதால் மிகுந்த உபயோகங்கள் உண்டு. ஸாதாரணப் பழக்கத்திலும் இந்த அறிவு ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டியது அவசியம் என்பது இங்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் உபயோகங்களால் நன்கு விளங்கும்.

கண்ணுடி அடைப்பு = Glass Stopper
திரவ அளவை = Hydrometre
திடவஸ்து = Solid
பால் அளவை = Lactometre
விசிஷ்டகன அளவை ஸீஸா = Specific gravity bottle

பிழை திருத்தம்

2-வது தொகுதி, பக்கம் 346

	பிழை	திருத்தம்
வரி 28	1-சத அம்ச இடம்.	1-இடசத அம்ச அளவு.
வரி 37	சத அம்ச இடம்.	இடசத அம்ச அளவு.

இயற்கை அற்புதம்.—பகவானுடைய சிருஷ்டியில் உள்ள அற்புதங்களில் பூகம்பமும் எரிமலைகளும் விசேஷமானவை. இவைகளினும் வியப்பாயுள்ளது அரிது ; பயங்கரமானதும் வேறென்றில்லை. ஆகையால் இவை எக்காலத்திலும் பாமர ஜனங்களுக்கு அச்சத்தை உண்டாக்குகின்றன. ஞானவான்களுக்கோ விசாரணைக்கு விஷயமாகி வருகின்றன. இப்படிப்பட்ட அதிசயங்களின் பிரகிருதி, ரூபம் அனைத்தையும் யாவரும் ஆராய்ந்து அறிய வேண்டுவது ஆவசியகம்.

இந்துலேகை

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வளவு அமர்க்களமான பின்பும் கூட பஞ்சுமேனனுடைய கோபம் அடங்கினபாடில்லை. மாதவனுடைய தகப்பனருக்கும் தாம்பூலம் பிடிக்க நினைத்து கோவிந்த பணிக்கர் வீட்டுப்பக்கம் திரும்பினன். சனியன் போதாமல் சீனுபட்டர் எதிரகப் பட்டுக்கொண்டார். பஞ்சுமேனன் அவரைப் பார்த்து, "என்ன ஸமாசாரம் இப்போது ? முந்தாநாள் என் வீட்டு மெத்தையில் நின்றுகொண்டு என்ன சொன்னுய் ?" என்று கேட்டார்.

"எனக்கு ஞாபகமில்லை" என்ருர் சீனுபட்டரும்.

ப.—"அடே ஜாதிகெட்ட பாப்பான், உனக்கு ஞாபகமில்லையாடா ?"

சீ.—"ஒரு காரணமுமில்லாமல் வீணுய் என் இப்படி பிராமணனை தூஷிக்கிறீர்?"

ப.—"ஆமாம், ஆசாரமுள்ள பிராமணன்தான், இல்லையா ? தெரியாதா எனக்கு உன் பிராமணத்துவம் ?"

சீ.—"என்ன சொன்னுய் நீ ?"

சீனுபட்டர் இன்னமும் கொஞ்சம் சுடுகையுடன், "ஆம், நீ என் மகனைத் தூக்குப்போட்டுவிடும்படி சொன்னபோது, பதிலாக நான், தூக்குமேடையில் இங்கிலீஷ் சொல்லிக்கொடுப்ப தில்லையே என்று சொன்னேன்" என்ருர்.

ப.—"இனி என் வீட்டு வழி வராதே."

சீ.—"அப்படியே, மனப்பூர்வமாய் இனி ஒரு போதும் உன் வீட்டு வாசற்படியண்டை வருவதில்லை."

ப.—"நமது பிராமணர் ஊட்டுப்புறையிலாவது கோயிலிலாவது நீ காலை வைத்தால் தெரியுமா?"

சீ.—"அதனுடன் நிறுத்து உன் அதிகாரத்தை. நீ யார் என்னைத் தடுக்க? ஒரு பிராமணன் எந்த ஊட்டுப் புறைக்காவது ஆலயத்துக்காவது போகலாம்."

ப.—"என்ன? என் உத்தரவில்லாமலா என் ஊட்டுப்புறையிலாவது கோயிலிலாவது காலை வைப்பாயென்று சொல்லுகிருய்? எதோ உனது சாமார்த்தியத்தைப் பார்க்கிறேன் நான்."

சீ.—"என்ன செய்வாய் நீ? நீ என்னைத் துராகிருதமாய்த் தடுக்கப்பார்த்தால் உன்மீது தாவா கொண்டு வருவேன்."

ப.—"அடா, ஈனஜாதிப் பயலே, என்ன பிதற்று கிறாய்?"

இந்த வாக்குவாதத்தின் இரைச்சலைக்கேட்டுப் பயந்து சங்கரமேனன் அவ்விடத்திற்கு ஓடிவந்து சீனு பட்டருக்கு அப்புறம் போகும்படி சைகைசெய்து விட்டுக் கிழவருடைய கோபத்தைத் தணிக்க முயன்றான்.

பஞ்சுமேனன் கோபத்துடன், "அந்தச் சீனுபட்டர் இனிமேல் என் கண்முன் ஒரு க்ஷணமும் வரக்கூடாது. அவன் என்மீது தாவா பண்ணப் போகிறானாம், அயோக்கியன், கொலைபாதகன், சண்டாளன். என்ன, காலத்தின் கொடுமை! இந்த மொட்டைபையன் எனது சிற்றப்பன் திவானின் கீழ் ஒரு வேலைக்காரப் பயலாய்க் கிடந்தான். அப்போது, இவன் இருந்த அந்தஸ்தென்ன? இவனுக்கு என்ன வாழ்வு வந்துவிட்டது? ஒருவரைச் சொல்லி என்ன பயன்? அது என்மீது குற்றம். நானேன் இவனை உயர்த்தி குடும்பத்தில் கொஞ்ச மதிகாரமுங் கொடுத்திருக்கவேண்டும்? பன்றியைப்போல் நாலைஞ்சு குட்டிபோட்டுவிட்டான். எல்லாம் அப்பனையே பிரத்தியக்ஷமாய்க் கொண்டுவந்திருக்கின்றன. உதவாக்கரைகள். என் மருமகன், என் சொந்த பையன் மாதவனுடன் சற்றுமுன் சண்டை போட்டது இந்த முண்டங்களினால்தான்" என்றான்.

வாய்விட்டு இவ்வளவு விருத்தாந்தங்கள் நடந்தபின்பு, பஞ்சுமேனனுடைய மனம் சற்று இளகிற்று. அவனுக்கு ஸ்வயபுத்தி வந்தது. கொஞ்சம் நல்லெண்ணங் கொண்டான். விம்மி விம்மி அழுது அவனுடைய வார்த்தைகள் தழுதழுத்தன. அப்போது சங்கரமேனன் பேசத் தலைப்பட்டான்: "மாதவன் அவனுக்கும் பொறுக்காமல் ஏதோ கொஞ்சம் புத்தியீனமாய்ப் பேசினான்." திரும்பவும் மாதவனுடைய புத்தியீனத்தைப் பற்றிய பிரஸ்தாபங் காதில் விழுந்தவுடன் பஞ்சுமேனனுடைய கோபம் முன்னிலும் பதின்மடங்கு அதிகரித்தது.

"அடே, கழுதாய், உன் மதியூகத்தை என்னென்று சொல்வேன். மாதவன் புத்தியீனமாயிருந்தானாம். அவனா புத்தியீனன்? நல்லது ஆகட்டும். அவன் தன் சொந்த வழியிலேயே நடக்கட்டும். அவன் என்னிடம் கூறிய வசைமொழிகளை நான் ஒருபோதும் மறவேன். இதற்குப் பழிக்குப்பழி வாங்காமல் விடுவதில்லை. கொஞ்சம் பட்டால் அவனது புத்தியீனம் மாறிவிடும். அப்புறம் வந்து எனது பாதங்களில் வீழ்வான். அவனுடைய தகப்பனார் ஆஸ்தி எனக்குத் துரும்புக்குச் சமானம்" என்று சொல்லிவிட்டு பஞ்சுமேனன் கோலை ஊன்றிக்கொண்டு கோவிந்த பணிக்கர் வீட்டுக்குப் போனான்.

சங்கரமேனன் புத்திசாலி. அவனுக்கு நன்றாய்த் தெரியும் கோவிந்த பணிக்கர் ஸாமார்த்தியத்தாலும் தந்திரத்தாலும் ஒரு சண்டையும் வரவொட்டாமல் தடுப்பாரென்பது. ஆதலால் அவன் வீட்டுக்குத் திரும்பிவிட்டான். பஞ்சுமேனனோ கோலை ஊன்றிக்கொண்டு மெள்ளமெள்ள நடந்து கோவிந்த பணிக்கருடைய ஜாகைவந்து சேரவே, பணிக்கரவர்கள் மரியாதையுடன் அவனுக்கு ஓர் ஆசனந்தந்து உட்காரவைத்தபின்பு, தானும் ஓராஸனத்தில் உட்கார்ந்தார். ஆரம்பித்து விட்டார் பஞ்சுமேனன்: "நல்லது, நல்லது! மாதவன் கடைசியில் என்ன ஸ்திதிக்கு வந்துவிட்டான் பார்த்தீர்களா? ஸமாசாரமெல்லாம் உங்களுக்குத் தெரியுமல்லவா?"

கோ.—"இந்த விஷயத்தில் மாதவன் ஏதோ சிறிது தன்னையே மறந்துவிட்டான்போல இருக்கிறது. அதெல்லாம் ஒன்றுமில்லை. இந்த இங்கிலீஷ் படித்துவிட்டாலே பசங்கள் பாடு கொஞ்சம் தலைதடுமாற்றமாகி விடுகிறது. போதாக்குறைக்கு அவன் பரீக்ஷைக்காக பட்டணஞ்சென்றிருந்தபோது பட்டணத்து உப்புஜலம் கொஞ்சம் உடம்பில் ஊறிவிட்டதுபோலும். அதுதான் காரணம் இவற்றிற்கெல்லாம். எது எக்கேடு கெட்டாலுங்கெடட்டும். அவன் தங்களை ஏதோ வித்தியாசமாய்ப் பேசினானமே. இந்தசெய்தி என் மனதிற்குச் சிறிதும் ஒப்பவில்லை. இந்தக் காலத்திய பசங்கள் ஸங்கதி எல்லாருக்கும் தெரிந்தது தானே. பெரியோர் வார்த்தையைக் கேட்பதென்பதுதான் போய்விட்டதே. அப்படியிருக்க நாம் என்னசொல்லி பயனென்ன என்றெண்ணி நான் ஒன்றும் அவனை விசாரிக்கவில்லை இது விஷயமாய்."

ப.—"ஒருவரும் விசாரிக்காவிடில் அவர்களுடைய தலை தம்படியாய்த் தள்ளிவிடுகின்றது. கடிவாளத்தை ஸமயத்தில் இழுத்துப் பிடிக்காவிட்டால் அவர்களுடைய ஓட்டம், பிடிப்பதற்கு அஸாத்தியமாகிவிடுகின்றது."

கோ.—"அது முற்றிலுஞ் சரியே. நீர் சொல்வதில் கொஞ்சமாவது தப்பில்லை. ஸந்தேகமே

கிடையாது கிஞ்சித்துங்கூட. வாலிபர்களை அவர்கள் இஷ்டப்படி விட்டுவிட்டால் அவர்கள் அடங்காப்பிடாரியாய் விடுகிறார்கள்."

ப.—"என் அருமைப் பணிக்கரே, நான் மாதவன் வயதிலே, என் சிறியபாட்டனார் முன்னிலையில், நான் நடுங்கிக்கொண்டிருந்தேன். அவரைக்கண்டால் எனக்கு ஸிம்ஹ ஸ்வற்பனந்தான். அவர் ஏதாவது என்னைக் கேட்டாற்கூட பதில்சொல்ல பயந்து மௌனஞ்சாதித்து நிற்பேன். நான் சிங்கத்தைக் கண்டால் எப்படி நடுங்குவேனோ அப்படி நடுங்கிக் கொண்டிருந்தேன் அவரைக் காணும்போதெல்லாம். இப்போது கூட, எததனையோ வருஷங்களாய் விட்டன, அவரைப்பற்றி நினைத்தால் எனக்கு மயிர்க் கூச்சலுண்டாகிறது.

அவரது ஜீவியகாலத்தில் எனக்கு நடந்த ஒரு கதையைச் சொல்லுகிறேன் கேளும்: "இதற்கருகாமையில் வசித்துக்கொண்டிருந்த குன்னியாலிகுட்டி என்னு மொரு மோப்லா வாலிபனுடன் நான் ஸ்நேகமாயிருந்தேன். நீர் அவனை எப்போதும் பார்த்திருக்கமாட்டீர். வெகு நாளைக்கு முன் அவன் இறந்துவிட்டான். ஆனால் அக்காலத்தில் அவனும் நானும் ஸமவயதுடையவர்களாயிருந்தோம். ஒரு காலத்தில் ஏதோ வியாபார விஷயமாய் அவன் தகப்பனாருடன் சென்று திரும்பியபோது அவன் எனக்கு ஒரு ஜதை மிதியடிக் கட்டைகளை இனாமாகக் கொணர்ந்து கொடுத்தான். நான் அவைகளை அதிக இரகஸியமாய்க் காப்பாற்றி வந்தேன். ஸாயங்கால வேளையில் உலாவிவரச் செல்கையில் அவைகளைத் துணி, கடிதம் எதிலாவது சுற்றியெடுத்துக் கொண்டு போய், பூவல்லி வீட்டிற்கு வெகுதூரம் போனபின்பு, காலில் போட்டுக்கொள்வது வழக்கம். அப்படியே திரும்பிவரும்போதும் வீட்டிற்கு வெகு தூரத்திலேயே யாவரும் பாராத வண்ணமாய்க் கழற்றித் துணியில் மறைத்துக்கொண்டு வருவேன். ஒருநாள் மாலை, வழக்கப்படி மிதியடிக் கட்டைகளைத் துணியில் சுற்றிக்கொண்டு திரும்புகையில் என் சிறிய பாட்டனார் மேல் தாழ்வாரத்தில் நின்றுகொண்டிருக்கக் கண்டேன். சிறிய பாட்டனாரென்றால், எனது சிற்றப்பனாகிய காலஞ்சென்ற திவானின் சிற்றப்பன். அவர் அதிக விருத்தாப்பர். அவர் என்னைப் பார்த்தவுடன், 'கையில் என்ன மூட்டை?' யெனக் கேட்டார். என் பாடு வெலவெலத்துப்போயிற்று; என்ன பதில் சொல்வதென்பது தெரியவில்லை; வாயடைத்துவிட்டது. அப்படியே முற்றத்திலிறங்கிவந்து அவர் என் கைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, துணியைத் திறக்கச் சொன்னார். அப்படியே திறந்தேன். மிதியடிகளைக் கண்ணுற்றார். 'ஓ ஹோ! பெரியமனிதராய் விட்டீர்கள் போல இருக்கிறது. மிதியடிக் கட்டைகளில்லாமல் நடக்கச் சரிப்படவில்லை போலும் துரைவாளுக்கு. ஏது அந்தஸ்து ஜாஸ்தியாய் விட்டது. அடே புரளிக்காரப் பயலே' என்று கூவிக்கொண்டே என் தலைமயிரைப் பற்றி இழுத்து தாழ்வாரத்தில் கொண்டுவந்து ஆரம்பித்து விட்டார் வியவஹாரத்தை. சிவசிவா அவர் ஓயமாட்டாரென்றெண்ணினேன். அவர் முதலில் கைகளால் வேண்டுமட்டும் புடைத்தார். ஆத்திரமடங்கவில்லை. பிரம்பு ப்ரயோகந் தொடங்கிவிட்டார். பிரம்பும் முறிந்து போய்விட்டது. இதோ பார்த்தீரா காலில் காயத்தை. அப்போதுபட்ட அடியின் அடையாளந்தானிது. நான் அழத்தொடங்கினேன்; வீறிடலானேன். அப்போது என் சிற்றப்பன், திவான் வீட்டிலிருக்குந் தருணமாயிருந்தது. என் அழுகைக் குரலைக்கேட்டு அவர், பூவரங்கத்திலிருந்து திடுக்கிட்டோடிவந்து, எனது பாட்டனாரை விலக்கி, என்னைப் பூவரங்கத்திற் கழைத்துப்போய் காயங்களுக்கு மருந்து போட்டார். அங்கே படுத்த படுக்கையாய் 15 அல்லது 20 நாள் கிடந்தேன். எனது சிற்றப்பன் மிதியடிகளைக் கொளுத்திவிடும்படி உத்தரவு பண்ணினார். அந்தநாள் முதல் நாளது தேதிவரையிலும் நான் ஒருநாளாவது மிதியடி தரித்ததில்லை. இப்போதுகூட எங்கேயாவது மிதியடிகளைக் கண்டால் என் பாடு நடுக்கமாயிருக்கிறது. இந்த நாள் சிறுவர்களைப்பாரும். மாதவன் எப்போதுஞ் செருப்புங் காலுமாய்த்தான் இருக்கிறான். அவன் என்னெதிரிலேயே வீட்டிற்குள் தரித்திருக்கிறான். அவனது பாட்டனார் திவான்கூட ஒருபோதும் இப்படிச் செய்ததில்லை. இந்த காலத்துப் பிள்ளைகள் 'தாங்கள்தான் ஸகலமுந் தெரிந்தவர்கள், பெரியவர்கள் சுத்த மூடாத்மாக்கள் என்று எண்ணியிருந்தால் நாமென்னசெய்யலாம் அதற்கு. நாம் அவர்களுக்கு இந்தப் பாழும் இங்கிலீஷைக் கற்பித்ததுமட்டும் அது நமது தவறுதான். இந்துலேகையைப் பாரும். அவள் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொள்ளாமலிருப்பின் எவ்வளவு நல்ல பெண்ணாயிருந்திருப்பாள்! என்ன செய்வது, க்ரகங்கள் சரியாயில்லை."

அவைகள் தான் இவ்வளவு பாடுபடுத்துகின்றன. இங்கிலீஷ் தெரியாதவர்களுக்குக்கூட தெரிந்தவர்களுடைய துர்நடத்தைகள் படிகின்றன. அந்தப் பறையன் சீனுபட்டனின் குமாரன் திருட்டுப்பையன் கோபாலனைப் பாரும். சற்று முன்தான் அவன் பூவரங்கில் என்னைக் கண்டபடி வாயில் வந்ததெல்லாம் உளறினன். எனக்குக் கோபம் உண்டாய்விட்டது. அவனைத் துரத்திக்கொண்டு ஓடினேன். நன்றாய் அடிக்கலாமென்று போகும்போது கல்தடுக்கி இடறிவிழுந்தேன். பாரும் என்முழங்காலில் அடியை. கலிகாலமென்பது கரதலாமலகம்போல் விளங்குகின்றது பாரும் இந்தத் திருஷ்டாந்தத்தில்!''

கோ.—'' அதற்குத் தடையில்லை. கலிகாலத்தின் கொடுமை அதிக ஜாஸ்தியாயிருக்கிறது போலும். இல்லாவிட்டால் இப்பேர்ப்பட்ட அடிகளுக்குங் காயங்களுக்கும் வேறு ஏதுவில்லை. அதற்குச் சிறிதும் ஐயமில்லை.''

ப.—'' கோவிந்தபணிக்கரே, உமக்கு ஞாபகமிருக்கிறதோ, என்னமோ. உமது குடும்பத் தலைவர்—உனது சிற்றப்பன் நாராயண பணிக்கர்—அதி விசித்திரமான விருத்தாப்பியர்:—ஒருகால் உம்மை வலிவாய் அடித்தபோது நான் வந்து தடுத்தேனே. அதோ காணப்படும் கோயிலில் ஒரும் பண்டிகையிலொருநாள் நீர் மற்றப் பிள்ளைகளுடன் திருடன் ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தபோது அவர் உன்னைப் பார்த்துவிட்டார். கோயில் மதிற் சுவரினின்று வீடுவந்து சேரும் வரைக்கும் அவர் கையும் ஓயவில்லை; உன் வாயும் ஓயவில்லை. வீடு சேர்ந்தபின்னும் அவர் தம் திருவிளையாடலை நிறுத்தவில்லை. தயை தாக்ஷணியமின்றி அவர் உன்னைப் புடைத்தார். உமது கூக்குரல் எனது செவிகளிற்பட்டன. உம்மை விட்டுவிடும்படிக்கு நான் வேண்டினேன். அது முதற்கொண்டு நீர் விளையாடுவதில்லை. உமக்கு ஞாபகமிருக்கிறதா?''

கோ.—'' ஆம். ஏதோ கனவு கண்டார் போலிருக்கிறது. ஆனல் ஒன்றும் தெளிவாய் ஞாபகமில்லை.''

ப.—'' அக்காலத்தில் உனக்கு வயது 14 கூட இல்லை. ஆனல் அக்காலத்தில் நமது சிற்றப்பன்மார்களிடம் நாம் வைத்திருந்த மரியாதையெல்லாம் இக்கெட்ட காலங்களில் அடியோடே போய்விட்டது. இங்கிலீஷில் இரண்டெழுத்துக் கூட்டிப் படிப்பதற்குள்ளேயே, இக்காலத்துச் சிறுவர்களுக்குக் கர்வமும் மனோ அகங்காரமும் உண்டாய் விடுகின்றன. வயது முதிர்ந்தவராகிய நம்மையெல்லாம் ஒன்றும் தெரியாத மூடர்களெனக் கருதிவிடுகிறார்கள். உண்மையில் கலிதேவதையின் லீலைகளில் இதுவுமொன்று என எண்ணுகிறேன். சில தினங்களுக்கு முன் இந்துலேகை ஒரு இங்கிலீஷ் புஸ்தகம் படிப்பதைக்கண்டு கதை என்னவென்று கேட்டேன். அதனுடைய கருத்தை மலையாள பாஷையில் சொன்னள். நான் திடுக்கடைந்தேன்.''

கோ.—'' என்னகதை? எனக்கு அதுதெரியாதே.''

ப.—'' அப்படியானல் சொல்லுகிறேன் கேளும். கதைகட்டுக்கதையேயென அவள் எனக்குச் சொன்னள். எப்படியானலென்ன? பால்ய மனதுகளைக் கெடுக்கத்தக்க கதைகளல்லவா என்பதை நீங்களே கதைகேட்டபின் யோசித்துப் பாருங்கள். எனக்குக் கதை பூரணமாய் ஞாபகமில்லை. ஏதோ ஒரு கனவான்—அவள் சொல்லியிருந்த போதிலும் எனக்குப் பெயர் நினைவில்லை—அவனுக்கு ஒரு பெண்ணும். அவள் தன் தகப்பனின் மருமகனை மணம்புரிவதாக உத்தேசித்திருந்தனளாம். அந்த கனவானுக்கும் அவனது மருமகனுக்கும் ஏதோ மனஸ்தாபமுண்டாம். ஆகையால் அவர் இருந்த மணத்துக்கு உடன்படவில்லை. ஏதோ தந்திரம் பண்ணி அவர் தன் மருமகனுக்கு வேறொருவளை விவாஹஞ் செய்துவைத்து விட்டாராம். தன் மகளுக்குத் தக்கவனெனத் தான் கருதிய பல மணமகனை அவளிடம் அனுப்பினராம். ஆனல் அவர்களிலொருவரையும் அவள் ஸம்மதிக்கவில்லையாம். கலியாணமே வேண்டாமென்று பிடிவாதஞ் செய்தாளாம். கடைசியாய் அவள் மனம் நொந்து இறந்தனளாம். தன் மகளின் மரணத்தை ஸகிக்க முடியாதவராய் அவளுடைய தகப்பனரும் காலகதியானராம். இதுதான் கதையின் ஸாராம்சம். இப்படிப்பட்ட உபயோகமற்றவைகளை யெல்லாம் படிக்க விடுவதால் பெண்கள் என்ன ஸ்திதிக்கு வருவார்கள். நீங்கள்தான் யோசித்துச் சொல்லுங்கள். பார்ப்போம், பணிக்கரே.''

கோ.—'' அவர்கள் அவ்வைகளை வாசிப்பது அதிக மானக்கேடானதுதான். மிகவும் அவமானமான செயல்தான். ஆனல் என்ன பண்ணலாம் அதற்கு? ஒருதரம் கற்றுக்கொண்டபின் அவர்களுடைய இங்கிலீஷ் வித்தையை அழிப்பது அஸாத்தியம்.

இக்கதையை இந்துலேகை எப்போது சொன்னாள் ?"

ப.—"கொஞ்சநாள் முன்புதான்."

கோ.—"நிஜந்தான்! இவ்விஷயங்களை ஏன் சிறுமிகள் படிக்கவேண்டும்? இராமாயணத்திலிருந்தாவது மஹாபாரதத்திலிருந்தாவது கதைகளை அவர்கள் படிக்கலாகாதா?"

"நான் சொல்வதும் அதுதான். பூவல்லியில் நமது புராதன ஸாஹித்யங்கள் ஏராளமாய்க் கிடக்கின்றன. ஆனால் ஒருவரும் அவைகளை லக்ஷ்யம் பண்ணுவதில்லை. அவைகள் எழுதப்பட்டிருக்கும் ஓலைச்சுவடிகளெல்லாம் செல்லரிக்கப்பட்டுப் பாழடைகின்றன. அவைகளைத் துடைத்து வரிசைக் கிரமமாய் வைக்கும்படிக்கு மாதவனிடஞ் சொன்னேன். ஆனால் அவன் செய்யவில்லை.

"நீர் ஏன் இந்துலேகைக்குக் கட்டளையிடக் கூடாது?"

ப.—"அவன்கூடப் பனையோலை கிரந்தங்களை வெறுக்கிறான். இந்தப் பெரியமனிதர்களி லொருவராவது கடிதாசியில் எழுதப்படாத கிரந்தங்களைக் கண்ணெடுத்துக்கூட பார்க்கமாட்டார்கள். இதெல்லாம் கலிகால மகிமைதான்."

கோ.—"கலிகால மகிமையைத் தவிர வேறெதுவுமன்று. வேறொரு காரணமும் எனக்குப் புலப்படவில்லை."

ப—"ஆனால் பெரிதானதொருபயம் என்மனதைச் சஞ்சலப்படுத்துகின்றது. இங்கிலீஷை அடிக்கடி படிப்பதினால் ஒருவேளை இவர்கள் கிறிஸ்தவமதத்தைத் தழுவி விடுவார்களோ? என்னமோ?"

கோ.—"இந்த விஷயத்தில் எனக்குங் கொஞ்சம் அஞ்சிக்கையாய்த்தானிருக்கிறது. இந்தத் தறதலைகள் கிறிஸ்தவமதத்தைத் தழுவிவிட்டால் நாம் என்ன செய்வது?

ப.—"நீர் சொல்வது சரி, முற்றிலுஞ்சரி, கோவிந்த பணிக்கரே. நீர் சொல்வதெல்லாம் நிஜந்தான். ஆனால் நாம் நமது கடமையை நம்மாலானவரை செய்யவேண்டும். அப்புறம் வருவது வந்துதான் தீரும். கொஞ்சநாட்களுக்குமுன் நடந்ததுபோல் இங்கே சச்சரவிடுவதற்காக நீர் மாதவனைக் கண்டிக்கவேண்டும்."

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

சிங்கமுஞ் சிற்றெலியும்:—

கானகத் திடையோர் கடுபெருஞ் சீயம்
ஊனமில் நித்திரை யுறங்கும் போழ்து
ஆனதோர் சிற்றெலி யதன்மே லோட—சீயமும்
விழித்து, கறுத்து பழித்தவ் வெலியை
கொண்டிட வாயுள் அண்டி எடுக்க—அவ்வெலி
"விலங்கின் மன்ன! விலக்குதி யுன்னெணம்;
உயிருட னென்னை விடுதி; உருவில்
சிறிய னாயினும் குறிப்பொ டுதவுவன்.
கோப மகற்றி, கொலை எணம் அகற்றும்! உம்
தாபந் தீர்க்க தவணையு முண்டே"
எனவுரை மாற்றம் வண்பெருஞ் சீயம்
மனவெறுப் பொடுகேட்டு வனத்திடவ் வெலியை
வளையிடை விட்டது ஒளிந்திட. மற்றோர்
தினத்திடை யந்த வனத்திடைப், பெருங்குரல்
ஒலிதனைக் கேட்டு மெலிந்தது சீயமென்
றெலியது வோடி வலியுடைச் சிங்கம்
வலையிடை அகப்பட்டலைந்து மனமது
கட்டம டைந்ததைக் கண்டுதன் கூரிய
திட்பமுள பற்களான் திறமொ டவ்வலையிற்
கட்டினைத் தெரித்து கவலை தீர்த்தது—தீர்த்துபின்
"உருவுங் குணனு பெருமித முடையாய்!
சிறிய வோரெலியான் சீய மதற்கு
வறுமையி லுதவிசெய் வலியுடைத் ததுவே!
என்றன் றுனக்கு என்னு னுதவி
துன்னு மெண்ணம் தோன்று திருந்தனை.
கண்டனை இன்றிக் கடியவோர் வேளை
அண்டி யுதவிசெய் யாற்ற முடைத்து—ஆதலான்
உருவஞ் சிறிதென் றெண்ணு துதவாத்
துருமமும் பற்றுந் துணையென் றறிதி" யென்
றவ்வெலி தன்வளை அடைந்தது வன்றே.

***

ஓர் அரிய புத்திமதி

முன்னொருகாலத்தில் ஓர் சக்கிரவர்த்தி இருந்தான். அவனுக்கு ஒரு பிள்ளையும் பெண்ணும் இருந்தார்கள். இந்த அரசன் மனுநெறி தவறாது ராஜ்யம் ஆண்டுவருகையில் ஏதோ காலபலத்தால் இவன் மனம் கெட்டுப்போய்விட்டது. அப்பொழுது

முன்னரே இவனிட மிருந்த ஸங்கீதப் பிரியம் இவனைப் படுகுழியில்தள்ள ஓர் காரணமாக ஏற்பட்டது. இந்த ஸமயத்தில் பெண்கள் பாடும் பாட்டைக் கேட்பதில் இவனுக்கு ஓர்வித திருப்தி உண்டாக, வரவர வேசைகள் பாட்டே கேட்கத் தகுந்தது என்ற அபிப்பிராயம் உண்டாகிவிட்டது. அதுமுதல் அவன் தன் பட்டணத்திலிருந்த ஓர் வேசையின் பாட்டைக் கேட்க மிகுந்த ஆவலுடையவனாகி, இராப்பகல் விழித்திருக்கும் ஸமயங்களில் எல்லாம், அவளை நாட்டியம் செய்யும்படி உத்தரவு செய்து அதைக் கண்கொட்டாது பார்த்துக்கொண்டும் மிகுந்த கவனமாகப் பாட்டைக் கேட்டுக்கொண்டும் தனது வாழ்நாட்களை வீணாகக் கழிக்கலாயினன்.

இப்படி அரசன் கான ரஸத்தில் மூழ்கி காலம் போவதே தெரியாது சில வருஷங்கள் இருந்துவிட அவனுக்குக் கிழவயது வந்துவிட்டது. அவன் பிள்ளைக்கோ ராஜ்யம் ஆளும் பருவம் வந்துவிட்டது. அவன் பெண்ணுக்குக் கல்யாணகாலமும் வந்துவிட்டது. இவைகளைக் கவனியாது அரசன் இருப்பதைக் கண்டு இவர்கள் மனம் வருந்தத் தொடங்கிவிட்டார்கள். யார் இதை அரசனிடம் சொல்லுவது! எல்லோருக்கும் பயம்தான். இங்கு இப்படி இருக்க, ராஜன் இவ்வாறு மூழ்கிக் கிடப்பதைக் கண்டு அவனிடம் பிரஜைகளுக்கும் ஓர்வித வெறுப்பு உண்டாயிற்று. இதனால் அவனுக்கு உயிர்த்தோழனான மந்திரிக்கும் மனம் கோணிவிட்டது. 'இதுதான் ஸமயம்! இப்பொழுது நாம் நல்ல ஸ்திதிக்கு வந்தால்தான் வந்தது! பிரஜைகளோடு சேர்ந்து இந்த ராஜ்யத்தை நாம் கைப்பற்றிக் கொள்ளவேண்டும்' என்ற கொடிய எண்ணம் அவன் மனதில் மூண்டெழத் தொடங்கிவிட்டது. இவ்வாறு அரசனைச் சுற்றி எல்லாம் புகைந்துகொண்டிருக்க, ராஜஸபையில் வேசை ஆடுவதையும் பாடுவதையும் அரசன் வெகு கவனமாகக் கண்கொட்டாது பார்த்துக்கொண்டும் கேட்பது நிறுத்தாமலும் இருந்து வந்தான்.

எவ்வளவு நாள்தான் இதை ஒருவரால் பொறுக்க முடியும்! ராஜகுமாரி இனிக் காத்திருப்பதால் பயனில்லை என்று கண்டு ஓர் நாள் இரவு மாறுவேஷம் பூண்டு அரண்மனையை விட்டு வெளியேறி தகுந்த புருஷனைத்தேடி மணப்பது என்று தீர்மானம் செய்துவிட்டாள். ராஜகுமாரன் ஜனங்களிடம் உண்டாகும் குழப்பத்தை ஒருவாறு உணர்ந்து 'நமது தகப்பனால் அல்லவா அவ்வளவும் உண்டாகிறது? நமக்கோ இன்னும் ராஜ்யவிஷய ஸம்பந்தம் கிடைக்கவில்லை. ஆதலால் இவரைக் கொன்றுதான் இவைகளைச் சீர்திருத்தவேண்டும்' என்று எண்ணி, ஓர் இரவில் கல்லைப்போட்டு இவரைக் கொன்றுவிடுவது என்று தீர்மானித்துவிட்டான். ஜனங்களது குழப்பம் அதிகரிப்பதைக் கண்ட மந்திரியும் ஓர் நாளிரவில் அரசனைக்கொன்று, தான் அரசனாகி விடுவது என்று தீர்மானித்துவிட்டான். இவர்கள் மனதில் தீர்மானித்திருந்த நாள் ஒரேநாளாக விருந்துவிட்டது.

இங்கு இப்படியிருக்க ராஜஸபைக்கு ஆட வரும் வேசை ஒருநாள் ஊருக்கு வெளியில் ஓர் பெரிய மஹான் வந்திருப்பதாகவும் அவரிடம் அநேகர் உபதேசம் பெற்று ஸுகம் அடைகின்றனர் என்பதாகவும் கேள்விப்பட்டு, அவரிடம்சென்று, தன் நிலைக்கு ஏற்ப அவருக்குப் பாதபூஜை செய்தாள். அவளுக்கு மஹான் ஓர் மந்திரோபதேசம் செய்ய, அன்று முதல் அவள் மிகுந்த சிரத்தையுடன் ஜெபம் செய்யத் தொடங்கினாள். தன் மனம் வரவர சாந்தம் அடைவதைக்கண்ட வேசைக்கு அந்த மஹானிடம் பக்தி வந்துவிட்டது. ராஜ ஸபைக்கு எவ்வளவு சிரத்தையுடன் இவள் ஆடப்போவாளோ, அதைவிட அதிக சிரத்தையுடன் இவள் தினம் மஹானைத் தரிசனம் செய்யப்போய் அவர் கூறிய உபதேச மொழிகளைமிகுந்த கவனத்துடன் கேட்டுவந்தாள். இதனால் இவளுக்கு 'வரவர நாம் ராஜனைக் கெடுத்து ஊரே குழம்பும்படி செய்துவிடுகிறோமே!' என்ற எண்ணம் மெதுவாக உண்டாகத் தன் ஆட்டத்தின் பேரிலேயே அவளுக்கு வெறுப்புப் பிறந்துவிட்டது. இதை எப்படியாவது நிறுத்திவிட்டால் நலமாக இருக்கும் என்று இவளுக்குப் பட்டது; இதைச்செய்யும் வழிமாத்திரம் இவளுக்குத் தோன்றவேயில்லை.

இப்படி இருக்கையில் அரசன் பிள்ளை, பெண், மந்திரி இவர்கள் தமது கொடிய செயல்களைச் செய்யக் குறிப்பிட்டிருந்த நாள் வந்துவிட்டது. அன்று ஸாயுங்காலம் இவர்கள் மூவரும் ஸபைக்கு வந்து உட்கார்ந்தனர். தாங்கள் செய்ய எண்ணியிருக்கும் விஷயங்கள் பிறருக்குத்தெரியாமலிருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் இவர்கள் இவ்வாறு செய்தார்கள் போலும். அன்றிரவு ஆட்டம் முடிந்

நதும் தமது காரியங்களைத் தயங்காது செய்து விடுவது என்று அவர்கள் தமது மனங்களைத் திடம் செய்து கொண்டனர். வேசை ஆடவந்தாள். மஹானது உபதேச மொழிகளால் மாறியிருந்த சித்தம் அவளை அன்று மிக வருத்திபது. ஆடத்தொடங்கினள் முன்போல ஆட்டம் அவளுக்கு ஸரியாக வரவில்லை. அவளாலானமட்டும் முயன்று பார்த்தாள். அவள் அகத்தின் அழகு ஆட்டத்தில் வெளிவந்தது. இது ஒருவருக்கும் தெரியாது. அரசன் இந்த மாறுதலைக் கவனியாது அவள் பாட்டு முதலியவைகளில் ஈடுபட்டு மயங்கிக் கிடந்தான். இந்த ஸமயத்தில் வேசை குருவாகிய மஹான் மனம் கொஞ்சம் கலைய, ஒருவருக்கும் தெரியாது அரண்மனை வாயிலில் இருட்டானவிடத்தில் வந்து உட்கார்ந்திருந்தார். அன்று தன் ஆட்டம் ஸரியாகாததுகண்டு வேசை அதை ஸரிப்படுத்த முயன்றுகொண்டே அன்று இரவு 3½-ஜாமத்தையும் போக்கிவிட்டாள். இதைக்கண்ட நட்டுவன் அவளைச் சீர்திருத்தவேண்டி, அந்த அதிகாலை ஸமயத்தில்,

‘சென்றது காலம் பெரும்பாலும் செல்வதற்கு
நின்றதுசில் போழ்து நிலைநோக்கா—தின்று
மனமென் சபல வழியில் செலுத்தல்
ஜனாஞ் ஜனமே ஸரி’

என்ற கருத்துடைய பாட்டை எடுத்துப் பல்லவி பிடித்தான்.

கேட்டாள் வேசை! அவளுக்கு ‘இரவிலோ 3½-ஜாம காலம் பெரும்பாலும் கழிந்துவிட்டது. இன்னும் கொஞ்சநாழிகைதான் இருக்கிறது. மனத்திடமில்லாமல் சஞ்சலப்படுவதால் என்ன பயன்? ஜனங்கள் ஸந்தோஷப்படக்கூடிய ஆட்டத்தைச் செய்வதே நலம்’ என்று பட, இன்றோடு நன்றாக ஆடிவிட்டு இங்கு வாராது நின்றுவிடுவோம் என்ற திடநிச்சயத்துடன் ஆடத்தொடங்கிவிட்டாள்.

அரண்மனை வாயிலிலிருந்த மஹான் செவியில் இந்தப் பாட்டுப் பட்டதும் அவர் வயிறு பகீர் என்றது. அவருக்கு ‘யோகியாகவிருந்து நமது ஆயுள் பெரும்பாலும் போய்விட்டது. இன்னும் ஆயுஸ் கொஞ்சம்தான் இருக்கிறது. மனத்திடமில்லாமல் சஞ்சலப்பட்டு பெண்பாட்டுக் கேட்பதால் என்ன பயன்? ஜனங்கள் ஸந்தோஷப்படக்கூடிய ஸன்மார்க்கத்திலிருப்பதே ஸரி’ என்று தோற்றியது. உடனே முன் பின் யோசிக்காது அந்த இடத்தை விட்டு மஹான் எழுந்து ‘அநியாயமாக மோசம் போனேமே. இனி இவ்வாறு மனம் சலிக்க இடங்கொடுக்கவே கூடாது’ என்று திடப்படுத்திக் கொண்டு தமது இருப்பிடம் சென்றார்.

மந்திரிகாதில் விழுந்தது இந்தப் பாட்டு! அவனுக்கு, ‘நாம் மந்திரியாகவே இருந்து வெகுகாலம் கழிந்தது. இனி ஆயுள் கொஞ்சநாள்தான். மனத்திடமில்லாமல் சஞ்சலப் பட்டு அரசனைக் கொலை செய்து ராஜ்யமாள எண்ணுவதால் என்ன பயன்? ஜனங்கள் ஸந்தோஷிக்கக்கூடியதாகிய ராஜ விச்வாஸத்திலிருப்பதே நலம்’ என்று த்வனித்தது. தன் கெட்ட எண்ணத்தை அவன் விட்டுவிட்டான்.

இதே பாட்டை ராஜகுமாரன் கேட்டதும், ‘நாம் ராஜ்யம் ஆளாது இவ்வளவுகாலம் கழிந்தது. இனி நமது தகப்பனுக்குகொஞ்ச ஆயுள்தான் இருக்கிறது. வீணாக மனத்திடமில்லாமல் சஞ்சலப்பட்டு அரசனைக் கொலைசெய்வதால் பயன் என்ன? ஆதலால் ஜனங்கள் ஸந்தோஷிக்கக்கூடிய தகப்பன் விசுவாஸத்துடன் இருப்பதே நலம்’ என்று அவனுக்கு உணர்ச்சிவர அவன் தன் கெட்ட எண்ணத்தில் நின்றும் நீங்கினான்.

ராஜகுமாரியும் கேட்டாள் இந்தப் பாட்டை. ‘கல்யாணமில்லாது இவ்வளவு காலம் கழிந்தது. நமது தகப்பன் காலம் இன்னும் கொஞ்சம்தான். இதற்குள்ளாக வீணாக மனத்திடமின்றிச் சஞ்சலப்பட்டு அரசனை விட்டு ஓடிப்போவதால் பயன் என்ன? ஜனங்கள் ஸந்தோஷிக்கக்கூடிய பிதா விசுவாஸத்துடன் இருத்தலே நலம்’ என்று அவளுக்கும் தோன்ற அவளும் தன் கொடிய எண்ணங்களை விட்டுவிட்டாள்.

இப்படி இவ்வாறு இவர்கள் பாட்டின் பொருளால் திருந்திக்கொண்டு வருகையில் பாட்டில் மூழ்கிக் கிடக்கும் அரசன் காதிலும் இது அடிக்கடி பட்டது. முடியும் காலத்தில் சற்று நிதானித்தான் அரசன். நட்டுவன் தன்னை நோக்கியே, ‘ஆயுஸோ பெரும்பாலும் போய்விட்டது. இன்னும் கொஞ்சநாள்

தான் இருக்கிறது. இதையும் மனத்திடமின்றிச் சஞ்சலப்பட்டுப் பாட்டுக் கேட்பதிலேயே மூழ்கிக் கழிப்பதால் பயன் என்ன? ஆதலால் இனியாவது ஜனங்கள் ஸந்தோஷிக்கக்கூடிய நியாய ராஜ்ய பரிபாலனத்தை செய்வதே நலம்' என்று கூறுவதாகத் தோற்றியது. அநியாயமாக இவ்வளவு காலத்தையும் வீணாக்கி விட்டோமே என்று துக்கித்தான்! அன்றோடு விட்டான் பாழும் பாட்டிலிருந்த மயக்கத்தை. அன்றோடு நின்றுவிட்டது ராஜஸபை ஆட்டமும்.

மஹான் கிருபைதான் இது என்று மகிழ்ந்து, அவர் இருந்த இடம் வந்து நோக்கினாள் வேசை. அவரை அங்கு காணோம்! கொஞ்சநாழிகை துக்கித்துவிட்டுத் தன் வீடு சென்று அவரையே குருவாக வைத்துக்கொண்டு விருத்தியாகி முடிவில் மேலான பதவியை அடைந்தாள்.

'இனி இங்கிருந்தால் உலகப்பற்று நம்மைக் கீழே இழுத்து விட்டால் என்ன செய்வோம்' என்று எண்ணி போகுமிடம் சொல்லாது மஹான் மறைந்தார் போலும். ராஜகுமாரிக்குத் தகுந்தபடி கல்யாணம் நடக்க, ராஜகுமாரனுக்கு அரசன் யுவராஜ பட்டாபிஷேகஞ் செய்து நம்பிக்கையான மந்திரியுடன் மிகுந்த சாந்தமாகத் தனது காலத்தைச் கழிக்கலாயினன். பிரஜைகளும் குழப்பம் நீங்கி ஸுகித்தனர். இவ்வாறு ஒரே பாட்டு, ராஜன், அவன் பெண், பிள்ளை, மந்திரி, யோகி, வேசி ஆகிய இவ்வாறு பேர்களை நல்ல வழியில் நிலைபெறும்படிச் செய்தது.

***

அகங்காரம், அல்லது, பெரியோர் நிந்தனையாகாது

ஒருக்கால், கைலாசபுரிவாஸனாகிய பரமேசுவரர் உமையுடன் விமானத்திலேறி ஸர்வ சிருஷ்டிப் பொருள்களின் அமைப்பைப் பரிசோதிக்கப் பிரயாணம் செய்தார். அவர் இப்பூமண்டலத்தின்கண் வரும்பொழுது ஒரு தேசத்தில் பல ஏழைக் குடிகளுடைய வாஸஸ்தானங்களின் மத்தியில் ஒரு அரசனுடைய ஸ்தானமாயும் ஏழு உப்பரிகைகள் அடக்கியவுமான அரண்மனையைக் கண்டார்.

ஜகதாம்பிகையும் இவ்வதிசயத்தைக் கண்டு பிரமித்து "இவ்வளவு வித்தியாசம் ஏற்பட காரணம் எங்ஙனம்?" என்று தமது நாதனைக் கேட்க, அவரும் விமானத்திலிருந்து கீழ் இறங்கி, அம்மனுடனே அம்மனிதன் கிரகத்தை நோக்கிச் சென்றார்.

அரண்மனைவாயிலில் வந்து, காவல் பார்க்கின்ற வீரர்களை நோக்கி, அம்மன்னனைக்காணத் தருணம் கொடுத்து அருள்செய்யப் பிரார்த்தித்தார். அவர்களோ தங்கள் ஆண்டவனின் கட்டளையைக் கடக்கப் பயந்தவர்களாய் ஏழைகளுடைய வேஷம் பூண்ட அவர்களை உட்செல்ல அனுமதி கொடுத்தருள இயலாதவர்களாக மிகக் கோபத்துடன் துரத்திவிட்டனர்.

ஆயினும் ஜகத்தினுடைய பிதாவின் மகிமையால் அவர்களுக்கு மயக்கம் மூட்டி, எப்படியும் உட்செல்ல தீர்மானித்தார். அப்படியே, எல்லா உப்பரிகைகளிலும் ஏறி, அதிமேலான ஏழாவது உப்பரிகையில் தங்க மயமான படுக்கையில் வீற்றிருக்கும் அம்மன்னனின் முன்னிலையில் எதிர் பாராமல் நின்றார்கள்.

அம்மகானோ வெனில் மிக்க கோபங்கொண்டு அவர்களைப் பிடித்து அதி கடூரத்துடனும், அதி குரூரமாயும், சேவகர்களைக் கொண்டு தன் மாடமாளிகையின் அப்புறம் தள்ள யத்தனித்தான். இதனால் கோபாவேசம் கொண்ட அம்மனும் தம் நாதரைத் திரும்பிப்போக பிரார்த்திக்க, அவரும் அம்மன்னனை ஆசீர்வதித்துச் சென்றார்.

இங்ஙனம் சிவனார் செய்ததைக்கண்டு உமையும் அதிகக் கோபம் கொண்டாள். பின்பு ஏழைப் பிராமணனின் வீட்டை நோக்கிச் சென்றார். பிராமணனுக்கு ஒரு பசுதான் ஜீவாதாரம். அப்பசு கொடுத்து வந்த எட்டு அல்லது பத்து சேர் பாலை விற்றுத்தான் அவன் ஆகாரம் செய்யவேணும். இவர்கள் அங்கு சென்ற தருணத்தில் பிராமணன் வீட்டில் இல்லை. ஏனெனில், அந்நாளில் அப்பசு கொடுத்த பாலை விற்க வெளியே சென்றிருந்தான். அவன் மனைவியோ அவர்களை விமரிசையாய் வரவு ஏற்று உபசாரங்கள் செய்தாள்.

அவர்கள் தமது பசியைத் தீர்த்துவைக்க அவ்வுத்தமியை வேண்டினார்கள். அவ்வுத்தமியோ எப்படி வறுமையினால் வருந்தினபோதிலும் தான் அணிந்த மங்களகரமான நகைகளை விற்று அவர்களுக்கு ஆசைதீரும்படி அன்னம் பூரணமாய் சர்வமும் சமர்ப்பித்தாள்.

இத்தருணத்தில் பிராமணனும் வந்துசேர மனைவி எல்லாவற்றையும் பிராமணநாதரிடம் சொல்ல, அப்பிராமண உத்தமர் அதிகக்களிப்புற்று மனைவியுடன் தானும் அவர்களை உபசாரம் செய்து களிப்பிக்கச் செய்தார். பின்பு, சிவனார் விடைபெற்று, அப்பசுவை தமது நெற்றிக்கண்ணால் அக்கினிக்குச் சமர்ப்பணம் செய்துவிட்டுச் சென்றார்.

இவ்வளவையும் கண்ட உமையானவள் தீராத் துயரம் அடைந்தாள்.

பிற்பாடு, தமது வாஸஸ்தானமாகிய கைலாஸத்தை நோக்கிச் சென்றார்கள். அவர்கள், வழியில், மகா கோரமான நரகங்களில் இப்பூலோகத்திற்கு ஈசுவரனை அம்மன்னன் அவஸ்தைப்படுவதையும், அப்பிராமண உத்தமரும் அவர் உத்தம மனைவியும் சுவர்க்கத்தில் சர்வ சுகங்களையும் அனுபவித்துக் கொண்டு இருப்பதையும் கண்டார்கள். ஈசுவரனால் தஹிக்கப்பட்ட அப்பசுவும் காமதேனு ரூபமாய் நிற்பதையும் கண்டார்கள்.

ஆகையால், இக்கதையிலிருந்து நாம் அகங்காரப்படலாகாது என்றும், பெரியோர் நிந்தனையும் தூஷணையும் மகாபாபகரமானவைகள் என்றும், எக்காலத்திலும் எவ்விதமான கஷ்டதசையில் இருந்தாலும் எப்பொழுதும்எல்லாப்பிராணிகளிடத்திலும் பக்ஷம் பாராட்டுவது ஸர்வ அவசியம் என்றும், ஸர்வஸம்பத்துக்கும் அனுகூலமாய் இருக்கிறதென்றும் அறிந்து கொள்ளுகிறோம்.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

புத்தக வரவு

BOOKS RECEIVED

*அமிருதவல்லி.—இது மலைமகள் எனும் மாதால் இயற்றப்பட்டது. விலை அணா 8.

கம்பரும், சோஷனும்—இஃது கா. நமச்சிவாய முதலியாரவர்கள் எழுதியது விலை அணா. 1

இயற்கையறிவு சம்பந்தமாகத் தோட்டவேலையும் எலிமெண்டேரி பாடசாலைகளில் கற்கும் முறை. இஃது ம-ா-ா-ஸ்ரீ என். ஸ்வாமிநாதய்யர், B.A., L.T., அவர்களால் எழுதப்பட்டது. விலை அணா. 4

இவைகளைப்பற்றிய குறிப்புகள் அடுத்த சஞ்சிகையில் வெளியிடப்படும்.

* இப்புத்தகம் வேண்டுவோர் "விவேக போதினி" மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

த்ரௌபதி அல்லது மனத்தினிலை

2. மீன்பொறி யெய்த காதை

அர்ஜுனன் மூலமாகப் பாண்டவர் துரோணர்க்குக் குருதக்ஷிணை அளித்தாரென்பது துரியோதனாதிகளுக்கு வெறுப்பை யுண்டாக்கியது. அவர் மேல் பகைகொள்ளவுஞ் செய்தது. இனி அவர் உயிரோடிருந்தால் தங்களுக்குக் குறைவென்றெண்ணி அவர்களை ஒழிக்கும் வழியைத் துரியோதனன் தன் தந்தையோடு யோசித்தான். கடைசியாகப் பாண்டுபுத்திரர்களுக்கு வாரணாவதமென்னு நகரத்தில் அரசு செலுத்தும்படி அனுப்புவதாக நிஸ்சயித்தார். ஆனால் நல்லெண்ணத்தோடல்ல. அங்கு புரோசனன் என்னும் தச்சனைக் கொண்டு அரக்கால் ஓர் மாளிகையியற்றிப் பாண்டவர்களை இருக்கச் செய்திருந்தனர். ஆனால் பாண்டவரது ஸுகத்தை கருதிய விதுரர் 'இவர்கள் பாண்டவர்கள் தூங்கும் பொழுது அரக்கு மாளிகைக்கு தீ வைத்து அவர்களைக் கொல்ல எத்தனித்தார்கள்' என்பதை அறிந்தார். புரோசனனும் அங்கு சென்றவுடன் பாண்டவர்களைக் கொளுத்திவிட யத்தனிக்கவில்லை.

இதற்குள் விதுரர் தனது மனத்திற் கிசைந்த தொழிலாளரைக் கொண்டு அரக்கு மாளிகையிலிருந்து ஓர் சுரங்கம் கங்கைக்கரையோரம் வரைக் கட்டுவித்து, அதைத் தர்மபுத்திரர்க்கு ரஹஸ்யமாகச் சொல்லி அனுப்பினார். புரோசனன் மாளிகையைக் கொளுத்த எண்ணங்கொண்ட நாளையுங் கண்டு தருமபுத்திரர்க்குத் தெரிவித்து, அன்று சுரங்கத்தின் மூலமாகக் கங்கையாற்றின் கரைக்கு வந்து, அங்கு தன் நம்பிக்கையான ஓடக்காரனைக்கொண்டு அவர்களை அக்கரை சேர்க்கும்படி ஏற்பாடு செய்திருந்தனர்.*

* 'இச்சுரங்கத்தை, மந்திரியாகிய புரோசனன் அரக்கு மாளிகைக்குத் தீ வைத்ததும் தான் தப்பியோட சிறந்த சிற்பியைக்கொண்டு இயற்ற, விதுரர் 'பாண்டவரைக் காப்பாற்றும் வழி யாது?' என வினவியபோது, அச்சிற்பி இந்த ரஹஸ்யத்தை விதுரர்க்குரைக்க, அவனைக்கொண்டு அதைப் பீமசேனற்கு அவர்உரைக்க, பீமன் அரக்குமாளிகைக்குத் தீ வைத்துவிட்டுத் தன் தம்பி, தமையன், தாய் இவர்களைத் தன் தோள், தலை, கை இவைகளிற்றூக்கிக் கொண்டு சுரங்கத்தின் வழியாய இடும்பவனத்தை அடைந்தானென்பது வில்லிபுத்தூராழ்வார் பாரதம்: வாரணாவதச் சருக்கம்.
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

தருமபுத்திரர் இச்சமாசாரங்களைப் பீமசேனனுக்குச் சொல்ல, பீமன் குறித்தநாளன்று புரோசனன் முதலிய யாவரும் நன்றாகத் தூங்கும் ஸமயத்தில் வீடுமுழுதும் நெருப்பு வைத்துவிட்டுத் தமயன், தாய், தம்பியர் யாவரையும் தோள், முதுகு, கை இவைகளில் தூக்கிக்கொண்டு, காலால் சுரங்கக் கல்லைத் தாக்கி, சுரங்கத்தின் வழியாக கங்கையாற்றங் கரையை அடைந்து, அங்கு காத்திருந்த ஓடத்தின் வழியாக அக்கரைக் கடந்து இடிம்பவனத்தை யடைந்து, இடிம்பனைக் கொன்று இடிம்பியையும் மணந்தான்.

பின் சிலநாள் இடிம்பவனத்தில் பாண்டவர் தங்கி இருந்தனர். அப்பொழுது வ்யாஸர் அவர்முன் தோன்றி அவர்களை ப்ராஹ்மண வேஷங்கொண்டு முதல் சாலிகோத்திரவனத்தில் சிலநாள் தங்கிப் பின் வேத்திரகிய நகரத்தை அடையும்படிச் சொன்னார். பின் அவர்களை ஏகசக்ர நகரத்திற்கழைத்துப் போய்த் தான் வரும்வரை அங்கு ஓர் பிராஹ்மணர் வீட்டிலிருக்கும்படி கொண்டுவிட்டுப் போனார்.

போனதும் ஏகசக்ர நகரத்தில் மிகத்துன்பத்தை விளைத்துக்கொண்டிருந்த பகாஸுரனைபீமசேனன் கொன்றபின்பு வியாஸர் அங்கு அவர்முன் தோன்றி த்ரௌபதியின் முற்பிறப்பின் சரித்திரத்தின் கடைசிப் பகுதியைச் சொல்லி, அவள்தான் பாண்டவர்களுக்கு மனைவியாகப் போகிறாளென்றும், அவளால் பாண்டவர்க்கு பெருமையும் உலகிற்கு ஸுகமும் மேன்மையும் உண்டாகப்போகிறதென்றும் சொல்லி மறைந்தார்.

இது நிற்க, சில பிராஹ்மணர்கள் பாஞ்சால நாட்டில் த்ரௌபதியின் ஸ்வயம்வரம் நடக்கப்போகிறபடியால் தாங்களங்குச் செல்வதாகப் பாண்டவரிடத்தில் கூறினர். இதைக் கேட்டதும்பாண்டவரும் அவருடன் புறப்படுவதாகச் சொல்லி தாயுடன் அவரோடுகூடச் சென்றார். வழியில் சித்ரரதன் என்னும் கந்தர்வனை ஸந்தித்து அவனோடு போர்புரிந்து பின் ஸ்நேஹங்கொண்டு அவன் மூலமாகத் தமக்கு தௌமியரென்னு முனிவனைப் புரோஹிதனாக ஏற்படுத்திக்கொண்டனர். பின் பாஞ்சால தேசத்தை அடைந்து அங்கு ஓர் குயவன் வீட்டிலிருந்த சிற்றறையுள் தாயாகிய குந்தியை இருக்கச்செய்து தாம் பிக்ஷை எடுத்து சிலநாள் ஜீவித்துவந்தனர்.

இதற்குள் பாஞ்சாலதேசமுழுதும் த்ரௌபதியின் ஸ்வயம்வரத்தின் பொருட்டு அலங்கரித்து, ஸ்வயம்வரத்திற்கு வருவார் இறங்க விடுதிகள் முதலியனவெல்லாம் செய்யப்பட்டனவாயினும், த்ருபதேயனுகிய யாகசேனனுக்கு மனவமைதியில்லை. இவன் யாகஞ்செய்தது த்ரௌபதியை அர்ஜுனனுக்குக் கொடுத்து மணஞ்செய்விப்பதற்காக வென்றே என்று முன்கூறப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க அரக்கு மாளிகையில் பாண்டவர்கள் இறந்துவிட்டார்கள் என்று எங்கும் வதந்தியாக விருந்ததன்றி பாண்டவர்களிருக்கும் இடமும் தெரியாமையால் அவர்கள் இறந்துவிட்டதாக எண்ணுதிருப்பதசாத்தியம் தன் பெண் மணமின்றி வெறுங்கன்னி கழிக்க நேரினும் நேரிடலாம். இவை முதலாகிய எண்ணங்கள் அவன் மனதைக் குடைந்தன. ஆயினும் "யாகஞ் செய்து அதில் முனிவரது அனுக்ரஹத்தினல் அர்ஜுனனுக்கென்றே பெற்ற பெண்ணை அர்ஜுனன் மணக்காவிட்டால் முனிவரது வாக்கு பொய்க்கும்; அது பொய்க்கமுடியாது; அர்ஜுனன் பிழைத்துத்தான் இருக்கவேண்டும்" என்று நிஸ்சயம் செய்துகொண்டு மேலும் ஆலோசனை செய்யலானான்:

"அர்ஜுனன் வில் திறமையில் சிறந்தவன். அதில் அவனுக்கு ஸமானமானவர் ஒருவரும் கிடையாது. ஆகையால் இந்த ஸ்வயம்வரத்தில் மிக்க வில் திறமையைக் காட்டக் கூடிய ஓர் சூழ்ச்சி செய்து அதில் மிக்கவனுக்கே த்ரௌபதியைக் கொடுப்பது. அதில் ஜயமடையக்கூடியவன் விஜயன் ஒருவன்தான். இதுதான்வழி" என்று ஆலோசித்து தன் மகனுகிய த்ருஷ்டத்யும்நனை அதற்குத் தகுந்த ஏற்பாடுசெய்யச் சொன்னான். அவனுமவ்வாறே 'மீன் பொறி' ஒன்று செய்யச் சொல்லி அதைச் சபை நடுவே வைக்கும்படிச் செய்தான்.

இதற்குள் ஸ்வயம்வரதினமும் விடிந்தது. சபை முழுதும் பலநாட்டு அரசரும் ஒன்றுகூடி நிலைத்திருந்தனர். ஒருபால் பார்க்கவந்தவர் முறைமைக்குத் தக்கவாறு ஆஸநத்திருந்தனர். இதனிடையே பாண்டுவின் மைந்தர்களும் தமது பிராஹ்மண

வேஷத்தோடும், தாயின் ஆசீர்வசனங்களோடும் வந்திருந்தார். வட்டமிட்ட சபையில் பல அரசர்கள் சூழ்ந்து ஆசனத்திலிருக்க, அதன் நடுவே வைக்கப்பட்ட மீன்பொறியிடத்தில் த்யுஷ்டதுய்ம்நன் தனது தங்கையாகிய க்ருஷ்ணை என்னும் த்ரௌபதியை நிறுத்திக்கொண்டு,

“ஹே! அரசர் குலத்துதித்து பெருமையும் கீர்த்தியும் அடைந்தவர்களே! இவள் என் தங்கை; நெருப்பில் பிறந்தவள். அழகில் சிறந்ததுபோல் குணத்திலும் உயர்ந்தவள். இவளை அடைவது எளிதல்ல. எதிரிலுள்ளது மீன் பொறி—மத்ஸ்ய யந்திரம். அதன் பக்கத்தில் ஓர் பெரும் நாண் உள்ளது. அதற்கருகு அநேக அம்புகள் உள்ளன. வாயுவேகமாக இவ்யந்திரம் சுழலா நிற்கின்றது மேலுள்ளது மீன் குறி. எவனொருவன் தனது தோள்வலியால் இப்பாரவில்லை வளைத்து நாணேற்றி, அம்பைப்பூட்டி, சுழன்றுவரும் அந்த யந்திரத்தினுடைய மைய வழியே அதைச் செலுத்தி மேல் காட்டி இருக்கும் மீன்குறியை எய்கின்றானோ அவன்தான் என் தங்கைக்குத் தலைவனாவன். அவனை என் தங்கை மாலையிட்டு மணஞ்செய்வள்” என்று சொல்ல, த்ரௌபதிக்கு செவிலித்தாய்கள், வந்திருக்கும் மன்னர்களை “இவன் பொய்யில் பிறந்து வளர்ந்த துரியோதனன்; இவன் சூதுமிக்க சகுனி; இவன் உண்மைக்கும், உயர்விற்கும், பெருமைக்கும், வள்ளல் தன்மைக்கும் மிக்க கர்ணன்; இவன் உலகில் கீழ்மையோரை உயர்த்த வந்த கண்ணன்;......” என்று இவ்வாறு இன்னாரின்னாரென்று சொல்லிக்கொண்டு கூட அழைத்துக்கொண்டுபோய்க் காட்டநின்றார்.

நிற்க. ஒரு மன்னராவது மீன்பொறியை எய்தாகவில்லை. த்ரௌபதியின் மேல்கொண்ட காதலின் எழுச்சியால், யான் யான் என்றெவ்வொருவரும் எழுந்தாரே அன்றி அவ்வில்லின் வலிமையையும் எய்வதின் கஷ்டத்தையும் எண்ணி எழுந்தவரல்ல. இவ்வாறு இருப்ப, கர்ணன் ஒருவன் மாத்திரம் வில்லை வளைத்து நாண் வீக்கி, அம்பைப் பூட்டி, அவ்யந்திரத்தின் இடையே எய்தான். ஆனால் அது மீன் குறியைத் தாக்கவில்லை. வில் தெறித்து கர்ணனைக் கீழ் சாய்த்துவிட்டது. த்ரௌபதியின் கிளைத்த நெஞ்சமும் தளர்ந்துவிட்டது. யாகசேனனுக்கும் மனவமைதி அற்றது. இனி என்ன செய்வது என்றயுத்ஷ்டதுய்ம்நனும் எக்கங்கொண்டான். இதை எல்லாம் பார்த்து நின்ற பிராஹ்மணவேடம் பூண்ட அர்ஜுனன் உடனே எழுந்து, “அரசர்கள் வில் வளைத்து, நாண் த்வனித்து, அம்பைச் செலுத்தி குறியை எய்தால் பெண் மாலையிடுவளோ, அன்றி ப்ராஹ்மணருள் யாராகிலும் அவ்வாறு செய்யின் அவர்க்கும் மாலையிடுவளோ?” என்று கேட்டான். அதற்கு யாகசேனன் “அது எங்களுக்குப் பெருமையே அல்லாது இழிவுக்குக் காரணமாகா” தென்றான். சொல்லியதொன்றுதான் அர்ஜுனன் அங்கு சென்று தனுசை வளைத்து, நாண் கயிற்றைப் பூட்டி அசைத்து, அம்பையேற்றி, யந்திரத்தினடுவே அம்பைப் போக்கி மேலிருந்த மீன்குறியை எய்தான். யாகசேனனும் அப்பிராஹ்மணச் சிறுவனுக்கே த்ரௌபதியை மாலையிடச் செய்தான்.

உலக ஆசை.—மீனை மூக்கில் கொந்திக்கொண்டு ஆகாயத்திற் பறந்து கொண்டிருந்த ஓர் பருந்தை மற்றைப் பருந்துகளும், காக்கைகளும் கூட்டமாய்ச் சேர்ந்து கா, கூ, என்று கத்திக்கொண்டு பின் தொடர்ந்து பறந்து அதனிடத்திலிருந்த மீனை எப்படியாவது பிடுங்கிக்கொண்டு போகப்பார்த்தன. அந்தப் பருந்து எந்தப்பக்கம் போனாலும், அங்கே மற்றப் பருந்துகளும், காக்கைகளும் கூச்சலிட்டுக்கொண்டு கூடவே பறந்து சென்றன. கடைசியில் அது இந்தத் தொந்திரவைப் பொறக்க முடியாமல் மீனைக் கீழே போட்டுவிடவே, மற்றொரு பருந்து அதை அந்தக்ஷணமே கொந்திக்கொண்டது. உடனே அந்தப் புதியப்பருந்தை மற்றைப்பருந்துகளும் காக்கைக் கூட்டமும் தொடர்ந்து சென்றன. முதற்பருந்து தொந்தரவு நீங்கி ஓர் மரக்கிளையின்மேல், கவலையற்று நிச்சல சித்தத்துடன் போய் உட்கார்ந்தது. இப்படி எண்ணமற்று உட்கார்ந்திருக்கும் பக்ஷியின் சாந்தமான நிலையை அவதூதர் பார்த்து வணங்கி, “பருந்தரசே, நீதான் எனக்குக்குரு, ஏனெனில் மனிதன் தன் தலைமேலிருக்கும் உலக ஆசைகளின் சுமையைக் கீழே தள்ளாதவரையில் கவலையற்று நிச்சல சித்தமாய் இருக்க முடியாதென்பதை எனக்கு நீ இன்று போதித்தாய்” என்றார்.—உபதேசரத்னமாலை

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

அழமுள்ள ஸமுத்திரம்.—பசிபிக் மகா சமுத்திரத்தில் "கு ஆம்" என்ற தீவுக்கருகே ஆழம் ஆறு மைல் இருக்கிறது. உலகத்தில் பெரிய சிகரமென்று கொண்டாடப்படும் இமையமலையின் பாகமாகிய எவரஸ்டு மலையை மேற்படி ஸாகரத்தில் மூழ்கவைக்கலாம்.

* * *

விலையுயர்ந்த முத்து.—பம்பாய் வர்த்தகர்களிடம் ஒரு அழகிய நல்முத்து பரீக்ஷைக்காக வந்திருக்கிறதாம். 34-காரெட் நிறையுள்ளதும் முக்கால் அங்குலம் பருமனுமான இந்த முத்து ஜோதிமயமாய்த் தோன்றுகிறதாம். இதைவிடச் சிறந்த முத்து உலகத்தில் கிடையாதென்று கூறுகிறார்கள்.

* * *

பம்பாய் மாகாணத்தில் நிலங்களுக்கு உரம் வைத்தல்.—பம்பாய் மாகாணத்திலுள்ள வியவசாயிகளெல்லாம் பிண்ணாக்கையும், மீனையும் உரமாக வைத்திருக்கிறார்கள். மேற்கண்ட இரண்டு உரங்கள் வைத்த நிலங்களில் மாசூல் மிகவுந் திருப்தியாய்க் கிடைக்கிறதாம்.

* * *

தலைமுடிகள் சேர்க்கும் தராதிபன்.—அபிசீனிய நாட்டிறைவனாகிய இரண்டாம் மேன்லிக் என்பவர் மனிதர்களுடைய தலைமுடிகளைச் சேர்த்துவைப்பதில் மிகப் பிரீதியுடையவராம். இவரிடத்தில் தற்போது 2000-தலைமுடிகள் இருக்கின்றனவென்றும் இவை நானாவித நிறமுந் தன்மையுமுடையனவாய் இருக்கின்றனவென்றுங் கூறப்படுகிறது.

* * *

சர்க்கரை உற்பத்தி.—உலகமுழுமையும் சர்க்கரை உற்பத்தி 1,50,00,000 டன் நிறையுள்ளதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் கரும்பினால் உற்பத்தி 75,00,000 டன்கள். சுமார் 5 வருஷங்களுக்கு முன் இதில் ஆறில் ஒரு பங்கு கூட உற்பத்தியில்லையாம். இந்தியாவில் கரும்பினால் உற்பத்தியாகிற சர்க்கரைமட்டில் 30,00,000 டன்கள் நிறையுள்ளதாம்.

தலைமயிர் வியாபாரம்.—அமெரிக்காவில் ஐக்கிய நாடுகளின் முக்கியபட்டணமாகிய நியூயார்க்குக்குச் சில வருஷங்களாகச் சீனாவிலிருந்து தலைமயிர் விலைக்கு வாங்கப்பட்டு ஏற்றுமதியாகிறது. இவைகளுக்கு நியூயார்க்கில் நூதனசாயங்கள் ஏற்றிச் சுருள் மயிராகவும், இன்னும் பலவிதமாகவும் ஏராளமான விற்பனை செய்கின்றார்கள். அமெரிக்கர்கள் இந்தத் தலைமயிர் தரித்துக்கொள்வதினால் பிரமை கொண்டிருக்கிறார்களாம். இந்தத் தலைமயிரில் வியாபாரம் போன வருஷத்தில் அதிகமாகி, மயிரை வாங்குவதற்காக அமெரிக்காவிலிருந்து சீனாவுக்கு நேரில் ஒரு வியாபாரியின் ஏஜெண்டு வந்தாராம். 1907-ம் வருஷத்தில் 56,133 ராத்தல் மயிரும், 1908-ம் வருஷத்தில் 2,07,414 ராத்தல் மயிரும் ஏற்றுமதி செய்யப்பட்டதாம்.

* * *

அதிசயமான காந்தக்கல்.—எடின்பரோ பலபொருட்காட்சி சாலையில் 3-கிரேயின் நிறையுள்ள ஒரு சிறிய காந்தக்கல் இருக்கிறது. அது தன் நிறைக்கு 445 பங்கு அதிகப்பட்ட நிறையைக் கவர்ச்சியால் தூக்குகிறதாம்.

* * *

நாற்பத்தையாயிரம் ஜனங்கள் கொள்ளும் மண்டபம்.—சிக்காகோவில் 45,000 பேர் வசதியாய் வீற்றிருக்கத்தக்க ஓர் பெரிய மண்டபம் நிருமாணிக்க முயற்சிசெய்யப்பட்டுவருகிறது. இம்மண்டபம் ஒரு சிறிய பட்டணமாயிருக்கும் போலும்.

* * *

தென்னம்பிள்ளை சாற்றுதல்.—ஆப்பிரிக்காவுக்குச் சமீபத்திலுள்ள மெடகாஸ்கர் என்னுந் தீவில் விவசாய இலாகாத்தலைவர் தென்னம்பிள்ளை சாற்றுவதில் செய்த சில பரிசோதனைகளின்பேரில், நெத்துக்களைக் குறுக்காகவாவது, அல்லது நெத்தின் அடியைச் சிறிது கீழே தாழ்த்தியாவது புதைப்பதால் நல்ல பிள்ளைகள் உண்டாகின்றன என்று தெரிவிக்கின்றார்.